www.tamilarangam.net

அய்ரோப்பா, கனடா 10 $
இலங்கை, இந்தியா ரூபாய் 10



# அகதியின் குரல்
# VOICE OF REFUGEES



எங்கெங்கும் அந்நியமாக்கப் பட்டவர்கள்தான் தமிழீழ அகதிகள். தஞ்சமடைந்த நாடுகளின் அகங்கார உபத்ரவத்தையும் சகித்துக் கொண்டு தமது தேசத்தின் சோகக் கதைகளை சுமந்து நிற்பவர்கள். கையிலும், தலையிலும் சுமைகளுடன், சேலைத் தலைப்பில் இழுபடும் மழலைகளுடன் புகலிடம் தேடி ஓடும் இவர்களா, வக்கரித்த நாகரீக உலகின் அவமானச் சின்னங்கள்...? அல்லது இவர்களை இந்த இழிநிலைக்கு தள்ளிவிட்ட ஆதிக்க யுத்த வெறியர்கள்தானா இவ் உலகின் புனிதப் படைப்புக்கள்...? இம்மக்கள் தஞ்சமடைந்த நாட்டின் பண்பாட்டு சீரழிப்பாளர்களோ, வன்முறை கலாச்சாரத்தை விதைப்பவர்களோ அல்லர். மாறாக மனிதகுலத்தை அழிக்க முனையும் நாசகாரர்கள் கட்டவிழத்து விடும் கொடிய யுத்தத்தின் பலியாடுகள். அவர்களால் திணிக்கப்படும் அட்டூழியங்களின் உயிர்ப்புள்ள சாட்சிகள். அமைதியும், சுதந்திர வாழ்வும்தான் அவர்களின் எதிர்பார்ப்புக்கள்; அவர்களின் எதிர்கால வாழ்வின் உயிராதாரம்.

அகதிகளின் எதிர்கொள்ளல் அசாதாரணமானது. தமிழீழ தேசத்தில் முட்கம்பி வேலிகளுக்குள்ளும், அச்சுறுத்தும் கானகங்களிலும் அவர்களின் நெஞ்சு பதறும் எதிர்கொள்ளல் தொடர்கிறது. தமிழகத்து கட்டாந் தரையிலும், அய்ரோப்பிய உறைபனியிலும் புதைந்து போயுள்ளது. எல்லாவற்றையும் இழந்து நிர்க்கதியாய் நிற்கிறார்கள். ஆனால் நம்பிக்கை நிலைத்து நிற்கின்றது. அகதி வாழ்வில் தொலைந்து போன அடையாளங்களை அம்மக்கள் எதிர்கால நிதர்சனங்களில் தேட முயல்கிறார்கள். அதுவே "அகதியின் குரலாக" ஒலிக்கிறது.





வவுனியாவிலுள்ள தடுப்பு அகதி முகாம்



பொலீசின் வானில் ஏற்றப்பட்ட அகதிகள் இராமேஷ்வரத்தில்

தமது தேசத்தின் சிதைக்கப்பட்ட வரலாற்றை, பிறிதொரு மண்ணில் அனுபவிக்கும் அகதிவாழ்வின் அவலங்களை தமது சகோதர மக்களிடம் சொல்லிமாளத் துடிக்கிறார்கள். முடிவில்லா அகதிவாழ்வின் முடிவிற்கு ஒரு முடிவைத் தேட எத்தனிக்கும் அவர்கள் ஆதரவு தேடி நேசக்கரம் நீட்டுகின்றனர். ஒரு இனத்தின் பெயராலும், மதத்தின் பெயராலும் தமிழீழ மண்ணின் மேல் தொடுக்கப்பட்ட இன அழிப்பு யுத்தத்தை எதிர்த்தும், இந்திய அரசின் ஒருதலை பட்சமான தலையீட்டை கண்டித்தும் இந்திய

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



மண்ணில் சகோதர மக்கள் நடத்தி வரும் போராட்டங்களின் சாட்சியாக தமிழீழ அகதிகள் உள்ளனர். மேலும் அம்மண்ணின் அமைதிக்காக இந்திய தலையீட்டை கோரியும் - மறுத்தும் நடக்கும் போராட்டங்களையும் காண்கிறார்கள். தமிழீழ மக்களின், அகதிகளின் உணர்வுகளை இதய சுத்தியோடு பிரதிபலிக்கும் சகோதர மக்களின் போராட்டங்கள் அவர்களுக்கு அந்தகார இருளில் தோன்றும் நம்பிக்கை ஒளியாக இருக்கும் என்பது திண்ணம்.

தமிழீழ தேசத்தின் நிகழ்வுகளோடு தொடர்புடைய சம்பவக் கோர்வைகளில், அவர்கள் கற்றறிந்தவற்றில் இருந்து தமது எதிர்கால வாழ்வைப் பற்றிய உள்ளக் கிடக்கையை "அகதியின் குரல்" மூலம் உங்கள் முன் வைக்கிறார்கள். அவற்றுக்கான வழிமுறை என்ன என்றும், சகோதர மக்களின் ஆதரவு எத்தகையது என்பது பற்றியும் இப் பத்திரிகையில் சொல்ல விழைகின்றனர். இதுவரை காலமும் அகதி மக்களின் வாழ்வை அயலாரும், அண்டிப் பிழைப்போரும், இனச் செருக்காளர்களும் தீர்மானித்தார்கள். அதனால் அம்மக்கள் தோற்கடிக்கப்பட்டார்கள். இப்போது அவர்களே தீர்மானிக்கப் புறப்பட்டு விட்டார்கள்.

# தமிழீழ மக்களின், அகதிகளின் ஆதரவாளர்களுக்கு அகதிகளின் வேண்டுகோள்



சந்திரிகா தலைமையிலான சிறீலங்கா அரசும், படைகளும் யாழ்ப்பாணத்தையும், கிளிநொச்சியையும் கைப்பற்ற நடத்தி முடித்த கொடூர யுத்தம், யாழிலும், கிளியிலும் நடத்தி வரும் தேடுதல் வேட்டைகள். வடக்கிலும், கிழக்கிலும் கையகப்படுத்த நினைக்கும் கிராமங்கள்-நகரங்கள் மேல் நடத்தும் விமானக் குண்டுவீச்சும், செல் அடித் தாக்குதல்களும், தரைப் படையின் துப்பாக்கி வேட்டுக்களும், தமிழீழ மக்களை வீடுகளை, வாசல்களை விட்டு விரட்டியடித்துள்ளது -விரட்டி வருகிறது. தாய் மண்ணைவிட்டு பெயர்த்தெடுக்கிறது. சொந்த மண்ணில் இலட்சோப இலட்சம் அகதிகள், பள்ளிகளில், பண்டகசாலைகளில், தெருக்களில் தமது உயிரைக் காக்க, நிற்கிறார்கள். யுத்தத்தில் இருந்து முழுவதுமாக தப்பிக்க ஒரே வழி கடலைத் தாண்டுவது. கடலைத் தாண்ட கரைகளில் ஆயிரமாயிரம் அகதிகள் காத்திருக்கிறார்கள்.

தமிழீழ அகதிகள் எங்கே போக முடியும்? தமிழ்நாட்டை நோக்கி... யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத் தீவு, பேசாலை, மல்லாவி, விடலைத் தீவு, மன்னார் பகுதிகளின் அகதிகள் தமது மூட்டை முடிச்சுக்களை தலையில் சுமந்து 100km நடந்து, கரைகளை அடைந்தனர். கரையில் பல இரவுகள், பகல்கள் காத்திருந்து, படகு உரிமையாளர்களுக்கு பணமும், பவுனும் வாடகையாக கொடுத்தும், சில அகதிகள் கூட்டம் படகை விலை கொடுத்து வாங்கியும் கொந்தளிக்கும் கடல் பயணத்தைத் தொடர்கின்றனர். சிறீலங்கா அரசின் கடற்படையின் கண்களுக்கு மண்தூவி தப்புவது, தப்பினாலும் இந்திய கடற்படையின் கண்களுக்கு தப்புவது கடினமாக இருக்கிறது.

215 அகதிகள் சென்ற படகுகளை நடுக்கடலில் கைப்பற்றியது. அதேபோல் தலை மன்னாரில் 105 அகதிகளுடன் புறப்பட தயாராக இருந்த படகுகளையும் கைப்பற்றிய சிறீலங்கா கடற்படை, அகதிகள் அனைவரையும் அரசு கட்டுப்பாட்டிலுள்ள முகாம்களில் தடுத்து வைத்துள்ளது. இவற்றை எல்லாம் தாண்டி இதுவரை 96 யூலைக்கு பின் 6255 தமிழீழ அகதிகள் தமிழ்நாட்டில் பதிவு செய்யப்பட்டு தஞ்சம் புகுந்திருக்கிறார்கள். அகதிகளை - புலிகளை பிரிக்கும், கண்டறியும் பல சோதனைகளுக்கு பின் 46 பேரை புலிகள் என அடையாளம் கண்டதாக கியூ உளவு பிரிவு கூறி தனி சிறப்பு முகாமில் அடைத்துள்ளது.

மற்றைய எல்லா அகதிகளும் மண்டபம் முகாமுக்கு முதலில் அனுப்பப்படுகின்றனர். தமிழ்நாட்டில் 1992ல் 200 அகதி முகாம்கள் இருந்தது. அன்று 40,000 அகதிகளை நிர்ப்பந்தப்படுத்தி இலங்கைக்கு திருப்பி அனுப்பியது இந்திய அரசு. இன்று மீண்டும் தஞ்சம் கோரியுள்ள அகதிகளில் 92ல் திருப்பி அனுப்பப்பட்டு மன்னாரில் UNHCR இன் தற்காலிக முகாம்களில் தங்கியிருந்தவர்களும் உள்ளடங்குகிறார்கள். 96ல் 137 முகாம்கள் இயங்குகின்றன. புதிய அகதிகள் பழைய முகாம்களில் காலியான இடங்களுக்கும்- புதிய முகாம்களுக்கும் தமிழ்நாடு மறுவாழ்வுத் துறை அதிகாரிகளால் அனுப்பி வைக்கப்படுகிறார்கள். இவர்களில் 43 குடும்பங்களைச் சேர்ந்த 143 அகதிகள் முகாம்களுக்கு வெளியிலுள்ள உறவினர் வீடுகளுக்கு செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளனர். மேலும் 150 குடும்பங்கள் இவ்வாறு வெளியில் செல்ல கோரியுள்ளனர். இவர்களைப் பற்றிய பூர்வீக நடத்தை பரிசோதனைகளை கியூ உளவுப் பிரிவு நடத்தி வருகின்றது. இந்த விடயத்தில் தமிழ்நாட்டு அரசின் வழிகாட்டு தலை கவனியுங்கள் "15 முதல் 35 வயதுக்குட்பட்ட

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ஆண்-பெண் அகதிகளை முகாம்களைவிட்டு வெளியே அனுப்பக்கூடாது". சிறீலங்கா அரசு "10 முதல் 40 வயது வரையான தமிழர்களை தனது சோதனைச் சாவடிகளைத் தாண்டிச் செல்ல அனுமதி மறுப்பது" பழைய கதை.

இந்திய அரசு 'அகதிகளுடன் புலிகள் ஊடுருவுவதாக, புலிகள் அகதிகளை அனுப்புவதாக' கூறி அதனால் அகதிகளை-புலிகளை தடுக்க நடுக்கடலிலும், கடற்கரையிலும் பாதுகாப்பை அதிகரித்துள்ளது. இராமேஷ்வரத்தில் தமிழ்நாடு சிறப்புக் காவல் படையின் 2 பிரிவுகளும் பிற கடற்கரைப் பகுதிகளில் மத்திய அரசின் சிறப்பு காவல் படையின் 10 பிரிவுகளும், 1 ஐ.ஜி. தலைமையில் 2000 கடலோர ரோந்து காவல் படையும் பணியில் உள்ளது. கடற்படை, விமானப் படை நடுக்கடலில் வட்டமடிக்கிறது. சுங்கத் துறை கடலோர காவல் படை, மத்திய உளவுத்துறை (ஐ.பி.) 'கியூ' உளவுப் பிரிவு கரையோரங்களில் சுறுசுறுப்பாக இயங்கி காவல் காக்கிறது. இலங்கையில் இருந்து அகதிகளை ஏற்றிச் செல்லும் படகுகளை நடுக்கடலில் கைப்பற்றுவதும், கரைகளுக்கு அழைத்துச் செல்வதும், சோதனை செய்வதும் இவர்களது கடமை. படகுகள் பறிக்கப்படுகிறது. படகின் உரிமம் இரத்து செய்யப்படுகிறது. ஓட்டிகள் கைது செய்யப்படுகிறார்கள். மொத்தத்தில் அகதிகளும் அகதிகளை ஏற்றிச் செல்லும் படகுப் பயணங்களும் அச்சுறுத்தப்படுகின்றது.

அகதிகள் செல்வதை-புலிகள் ஊடுருவுவதைத் தடுக்க எத்தனை பாதுகாப்பு படைகள். தமிழ்நாட்டு மீனவர்கள் கடலில் மீன்பிடிக்கும் போது சிறீலங்கா கடற்படையால் கடத்தப்படுவதையும், கடலில் சுட்டு சாகடிப்பதையும் இப்படைகளால் தடுக்கமுடியவில்லை. மன்னாரிலும் கொழும்பிலும் தமிழக மீனவர்கள் கடத்திவரப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளார்கள். இவர்களை மீட்க இந்திய அரசு தலையிடவில்லை, முயலவில்லை. மீனவர்களை மீட்டுத்தரும்படியும், இறந்த மீனவர்களுக்கு நஷ்ட ஈடு கோரியும் பாம்பனில் 1500 மீனவர்களும், 300 நாட்டுப் படகுகளும் வேலைநிறுத்தத்தில், இரயில் நிறுத்த போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

உலகம் பூராவும் உள்ள அகதிகளின், தமிழீழ ஆதரவாளர்களின், அமைப்புக்களின் இன்றைய உடனடிக் கடமை உயிர்ப் பாதுகாப்பு கோரி இந்தியாவுக்குள் தஞ்சம் கோரும் தமிழீழ அகதிகளுக்கு ஆதரவளிப்பதும்; கடலிலும், கரையிலும் தமிழீழ அகதிகளுக்கு இந்திய அரசு கொடுக்கும் நிர்ப்பந்தங்களை நீக்குவதும் ஆகும்.



**இந்திய அரசு**

**தமிழீழ அகதிகளுக்கு ஆதரவளிக்க கோருவோம்!**
**தமிழீழத்தில் தலையிடுவதை நிராகரிப்போம்!**
**தமிழ்நாட்டு மீனவர்களை பாதுகாக்க கோருவோம்!**

# தழிழீழ அகதிபற்றி யாருக்கு அக்கறை?!

சிறீலங்கா சிங்கள பௌத்த இனவெறி அரசின், உலக வல்லரசுகளின் தேசிய இன ஒடுக்குமுறை யுத்தத்துக்கும் எதிரான தமிழீழ மக்களின் போராட்டம், இப்போது பாரிய நெருக்கடியை உள்நாட்டிலும்-வெளிநாடுகளிலும் எதிர் கொள்கிறது. இத்தகைய நெருக்கடியை தமிழீழ அகதிகளும் - தமிழீழ ஆரவுப் போராட்ட சக்திகளும் சந்தித்து நிற்கின்றனர். "புலிகளை அழிப்பது - தமிழ் மக்களை பாதுகாப்பது" என்ற பெயரில் சந்திரிகா அரசு நடத்தி வரும் "அமைதிக்கான யுத்தம்" இன்று இலட்சக்கணக்கான தமிழ் மக்களை உள்நாட்டில் அகதிகளாக்கி வருகிறது. ஆயிரக்கணக்கான அகதிகளை இந்தியாவுக்குள் தஞ்சம் கோரி நுழைய வைக்கிறது. இதற்கு மூலகாரணம் சிறீலங்கா அரசு தொடுத்துள்ள இன வெறித் தமிழின அழிப்பு யுத்தமே!

சிறீலங்கா அரசு ஒரு 'மோசடி அரசியல் தீர்வு திட்டத்தை' முன்வைத்த படி, தமிழீழ மக்கள்மேல் ஒரு காட்டுமிராண்டித்தனமான யுத்தத்தை கட்டவிழ்த்து விட்டுள்ளது. புலிகள் யாழ்ப்பாணம், கிளிநொச்சி பகுதிகளை அரசிடம் இழந்து நிற்கிறார்கள், இந்தியாவும் அய்ரோப்பிய அமெரிக்க நாடுகளும் தமிழீழ அகதிகள், போராளிகள் மீதான கண்காணிப்புகளை, கட்டுப்பாட்டுகளை கூட்டிவருகின்றன. புலிகளை பயங்கரவாத இயக்க பட்டியலில் அறிவிக்கத் தயாராகின்றன. புலிகள்மீது தடைவிதித்துள்ள இந்திய அரசு தமிழ்நாட்டில் கூட தமிழீழ ஆதரவு, புலி ஆதரவு பற்றி பேசியதற்காக தமிழ்த் தேசப் பொதுவுடைமைக் கட்சியின் மணியரசனையும், தமிழ்-தமிழர் இயக்கத்தின் சுபவீரபாண்டியனையும் இந்திய C.B.I. கைதுசெய்துள்ளது. தமிழீழ ஆதரவு போராட்டங்களை அச்சுறுத்தத் தொடங்கியுள்ளது. உலகத்தமிழர்களின் தாயகம் என்று பேசப்படும் தமிழ்நாட்டில், தங்கள் உயிரைப் பாதுகாக்க தஞ்சம் கோரும் தமிழீழ

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



அகதிகளைக்கூட கலைஞர் ஆளும் தமிழ்நாடு அரசு வேண்டா வெறுப்பாக அனுமதிக்கிறது. தமிழீழ அகதிகள் நடுக்கடலிலும், கரையிலும், முகாம்களில் மனிதாபிமானம், இன, மொழி உணர்வு அற்ற முறையில் நடத்தப்படுகிறார்கள். அகதிகளுக்கான அய்.நா. சபையின் சட்டத்தை மதிக்கமறுக்கும் தமிழ்நாட்டில் தமிழீழ அகதிகளுக்கு ''அகதி அந்தஸ்து'' கொடுக்கமறுக்கும், தி.மு.க. அரசு, உலகத் தமிழர்களின் அரசாகவும், தலைமையாகவும் தன்னைக் காட்டிக் கொண்டு எல்லாத் தமிழ் மக்களுக்கும் காட்சியளிக்கிறது.

இந்தக் காட்சி இன்று நேற்று தொடங்கியதல்ல. ராஜீவ் மரணத்துக்குப் பின் ஆட்சிக்கு வந்த ஜெயலலிதா அரசு தமிழீழ அகதிகளையும், போராளிகளையும் எப்படி அடக்கி ஒடுக்கினார்? ஜெயின் கொமிசன் முன்பான ஜெயின் வாக்குமூலங்கள் இதற்கு ஆதாரம். இலங்கை-இந்திய ஒப்பந்தத்தின்பின் கலைஞர் ஆட்சி தமிழீழ அகதிகளை போராளிகளை எப்படி கருணையுடன் அடக்கியாள வழிகாட்டியது என்பதற்கு ஜெயின் கொமிசன் முன்பான கலைஞரின் வாக்குமூலங்கள் போதும்.



மீண்டும் தி.மு.க. ஆட்சிக்கு வந்தபோது புலிகளும், தமிழீழத் துரோகத் தலைமைகளும் பூச்செண்டு கொடுத்து வாழ்த்தினர். தமிழீழ மக்களுக்கும் தமக்கும் ஆதரவு கொடுக்க கோரினர். இன்று தமிழீழ அகதிகளுக்கு தஞ்சம் கொடுப்பதில் இந்திய மத்திய - மாநில அரசுகள் கடைப்பிடிக்கும் கொள்கை - நடைமுறைகளை தவறை சுட்டிக்காட்டி அகதிகளுக்கு ஆதரவு கோர இத் தமிழ்த் தலைமைகள் முன்வரவில்லை. புது டெல்லியில் சோனியா காந்தியை சந்தித்த - தமிழ்நாட்டில் கலைஞரை சந்திக்க இம்மாதம் காத்திருக்கும்EPDP டக்ளஸ் தேவானந்தா எதைப்பற்றிப் பேசுகிறார்? ENDLF தமிழீழத்தில் இந்திய அரசு தலையிட கலைஞர் அரசிடம் மனுக் கொடுத்தது கடந்த மாதம்.

தத்தமது இயக்க நலன், தலைமைகளின் சுயநலன் இவற்றிலிருந்துதான் வெளிப்படையாகவும் - இரகசியமாகவும் அகதிகளை முன்னிறுத்தி இந்திய அரசிடம் ஆதரவு கோரி வருகிறார்கள். தமது இயக்கத்துக்கு ஆதரவு கோருவது ஒருபுறம், இந்தியா தலையிடக் கோருவது மறுபுறம். எந்தத் தலைமைகளும் தமிழீழ அகதிகளுக்கு, தமிழீழ தேசத்துக்கு ஆதரவு கோரவில்லை. அகதிகளுக்காக உண்மையாக எவரும் குரல் கொடுக்காத - போராடாத நிலையில் தமிழீழ அகதிகளே தமது தலைவிதியைத் தாமே தீர்மானிக்கத் தலைப்பட்டுள்ளார்கள்.

# எல்லாமே விட்டு விட்டு எங்கிவர்கள்...?

ஐயோ என் தாயே,
அறிவார்ந்த யாழ்ப்பாண
அம்மா! - இது கொடுமை!
தாயைப் பிரிந்து
தவிக்கின்ற பிள்ளைகள் போல்
நாடம்மா! உனைப் பிரிந்து
நலிகின்றோம் இது கொடுமை!
முப்பது - பத்து
தொண்ணூற்று ஐந்தன்று
முன்னிரவு வேளை
மூதேசி வந்தது போல்
பயங்கரச் செய்தி ஒன்று
பட்டாளம் வருகிறதாம்!
ஓடுங்கள் ஊரைவிட்டு!
உடனே புறப்படுங்கள்!
தாமதித்தால் ஆபத்து!
தப்பாது உங்கள் உயிர்!
என்றந்தச் செய்தி
எமனாக வந்ததம்மா!
அடுத்த கணமே
அயலட்டை எல்லாரும்
கையிலே தலையிலே
காவும் பொருள்களுடன்
ஒழுங்கைக்கு வந்தார்கள்
ஒழுங்கை நிறைந்து விட
குய்யோ முய்யோ
கூச்சல் குழப்பங்கள்!
ஒழுங்கையால் நடந்து பெருந்
தெருவுக்கு வந்தோமா
ஐய்யோ என்ன இது
ஊர் முழுக்க அங்கே
ஒரேயடியாய் நடக்கிறது
ஆண்கள், பெண்கள்
ஆடி விழுந்து விடும்
அப்புமார், ஆச்சிமார்,
கைபிடித்து நடக்கும்
கண்ணான சின்னவர்கள்
இடுப்பிலே இருக்கும்
இளசுக்கு அடுத்ததாய்
வயிற்றுக்குள்ளேயிருக்கும்
வருங்கால மொட்டுக்கள்
காலை இழந்து
கைத்தடியில் நடப்பவர்கள்
கண்ணை இழந்து-பிறர்
கைபிடித்து நடப்பவர்கள்
என்ன கொடுமை இது
என்ன கொடுமை இது
ஊர் முழுக்கக் கூடி
எங்கே நடக்கின்றார்?
கட்டிய வீடும்
கமம் புலமும் - அத்தோடு
தின்னாமல் குடியாமல்
திரிந்தலைந்து பணம் சேர்த்து
வாழ்நாள் முழுவதும்
வாங்கி வைத்த சொத்துக்களும்
பரம்பரையாய் பரம்பரையாய்
பதுக்கி வைத்த சொத்துகளும்
எல்லாமே விட்டு விட்டு
'எங்கேயோ' போகின்றார்!
அன்பாய், அருமையாய்
ஆசையாய் தாம் வளர்த்த
ஆடுகள், மாடுகள்
அழகான நாய், பூனை
எல்லாமே விட்டு விட்டு
எங்கிவர்கள் போகின்றார்?
'எங்கேயோ' போகின்றார்!
இராப்பொழுது மழை நேரம்
ஈ காக்காய் போலலைய
இவர் செய்த பாவமென்ன?
இது கொடுமை அம்மம்மா!
பொன்னாலை ஆண்டவனும்
'போ' என்று விட்டானோ?

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## அகதியின் குரல்

மாவிட்ட புரத்தானும்
மௌனியாய் விட்டானோ?
தெல்லிப் பழைத்துர்க்கை
தெரியாமல் இருந்தாளோ?
பட்டணத்துச் சிவனாரும்
பாராது இருந்தாரோ?
நல்லூர் முருகன்
நடந்தாரோ எம்முடனே?
அந்தோனி யாரும்
அருள் பொழியும் மாதாவும்
வந்தாரோ எங்களுடன்
வழிநடத்தி செல்வதற்கு?
ஆண்ட அரசுமில்லை
அதற்கு மேல் எம்மையெல்லாம்
காக்கும் என நம்பி
கையெடுத்து கும்பிட்ட
தெய்வங்களும் எம்மை
தெருத்தெருவாய் அலைய விட்டார்!
அம்மா இது கொடுமை
அகதியாம் நாங்கள் இனி!
செவ்வானம் கிழக்காகச்
செம்மணியை வந்தடைந்தோம்
அங்கு வந்த போது
அய்யனே பெருமானே
எங்கும் சனக்கூட்டம்
சனமந்தை சன வெள்ளம்
லட்சமா லட்சமா
லட்சோப, லட்சம்
மனித குலம் இந்த
மண்ணில் நெளிகிறது.
'அண்ணை எங்கே' தம்பி எங்கே?
அக்காவைக் காணவில்லை
கூடவந்த குமரேசைக்
கூப்பிடுங்கோ காணவில்ல!
இவ்விதமாய்த் தேடுகின்ற
இயல்பினர்கள் ஒரு பக்கம்;
அம்மா பசிக்கிறது
அம்மா தேத்தண்ணி
தண்ணி விடாய்க்குதம்மா பச்சைத்
தண்ணி யேனும் தாருங்கோ
கால்கள் உளையுதம்மா
களைப்பாய் இருக்குதம்மா
இந்த விதமாக
இதயத்தைப் பிழிந்தெடுக்க
வந்த குரல்கள்
அனுங்கல்கள்
அழுகைகள்
ஐயோ எனக் குழறும்
அழுகைக் குரல் ஒலிகள்
என்னபாவம் செய்தோம்
இதையெல்லாம் கேட்பதற்கு?
மந்தை நடக்கிறது
நடக்கிறதா? இல்லையில்லை

நத்தை நகர்வது போல்
நகர்கிறது அது கூட
முன்னாக இரண்டடி போய் -
இடிபட்டால்
பின்னுக்கோர் அடிவைத்து
இப்படித்தான் நடந்தார்கள்
இது உண்மை!
மழையில் நனைந்து
மனமும் மிகச்சோர்ந்து
வெய்யிலே காய்ந்து
வியர்வை தனில் குளித்து
எப்படியோ நடந்தார்கள்
அப்படியாய் வழி நடந்து
பத்துமைல் நடக்க
எத்தனை மணி நேரம்
மணிக்கணக்கைத் தாண்டி
நாட் கணக்கு ஆயிற்று
பொய்யில்லை புழுகில்லை
பத்துமைல் நடக்கப்
பாவியர்க்கு இரண்டரை நாள்
கின்னஸ் புத்தகத்தில் இதைக்
கிடத்தி வைக்க லாமெல்லோ?
சிரிப்பா? சிந்தித்துப் பார்க்கச்
சித்தம் கலங்கிறதே!
நடை மெலிந்தோர் கண்கலங்கி
நன்றாக களைத்து போய்
சாவகச்சேரியெனும்
சந்நிதியில் நிலை கொண்டார்!
அங்கே
கோயில்கள் பள்ளிக்
கூடங்கள் எனுமிடங்கள்
விரைவாய் நிரம்பிவிட
வெளியிலே இடம் தேடி
தெரிந்தவர்கள் வீட்டுத்
திண்ணைகளும் நிரம்பி விட
அதன்பிறகு
வளவுகளில் கொட்டில்கள்
வசதியாய் போட்டார்கள்
வசதி என்றா சொன்னேன்?
நல்ல வசதி இது!
யாழ்நகரில்
படுபதற்கு ஓர் அறையும்
படிப்பதற்கு ஓர் அறையும்
சமைப்பதற்கு ஓர் அறையும்
சாப்பிடுவதற்கோர் அறையும்
இருப்பதற்கு ஓர் அறையும்
ஸ்டோராய் ஓர் அறையும்
கழிப்பறையும் குளிப்பறையும்
கவினாகக் கட்டமைத்து
கண்ணியமாய் வாழ்ந்தவர்கள்
பத்தடிச் சதுரத்துள்
பன்னாங்கு கொட்டிலிலே
எல்லாமே ஓரிடமாய்

நல்ல 'வசதி' இது
சாவகச்சேரி தனில்
சரியாக முறையாக
வாழ்ந்திருந்த மக்களிடம்
வந்த சன வெள்ளம்
குத்து மதிப்பாகக்
குறைந்தது ஐந்து லட்சம்
சாவகச்சேரிச் சன
சமுத்திரத்தி லேயிலிருந்து
கிளாலி வழியாகக்
கிளிநொச்சி பக்கம் போய்
தண்ணீர் வசதியின்றி
தங்குவதற்கும் இடமின்றி
வாழ்வைத் தொலைத்து
வாழ்ந்தவர்கள் ஒரு பகுதி
வல்லவர்கள் வாழ்ந்திருந்த
வடமராட்சிக்கு வந்து
வாழத் துடித்து நின்ற
வலுவற்றார் ஒரு பகுதி
பெற்றோர் ஒரு பக்கம் பல
பிள்ளைகளோ மறுபக்கம்
உற்றார் உறவினர்கள்
உருக்குலைந்து போனார்கள்!
சிச்சீ, இது என்ன
சீர்கெட்ட சிறுவாழ்க்கை!
இருக்க இடமின்றி
இடைஞ்சலுற்ற ஏதிலிகள்
உண்ண உணவுக்கும்
உற்றபல தேவைக்கும்
பட்ட பெருங்கஷ்டம்
பாடமுடி யாதம்மா!
வீட்டுக்குள்ளே 'பைப்'பை
விரைவாகத் திறந்து தண்ணீர்
ஓட்டத்தைப் பார்த்தவர்கள்
வளவுகளைத் தாண்டி
வயல்கள் பல தாண்டி
தண்ணிக்குப் பட்ட கஷ்டம்
தறிபடுமோ தயிர்படுமோ
பாணுக்கு கொஞ்ச நாள்
பட்டதுயர் போதும்மம்மா
அரிசியும் மாவும்
அருந்தலாய்க் கிடைத்ததுதான்
காய்பிஞ்சு தேங்காய்
கடிதங்கள் எழுதுவதற்கு
கடதாசி முத்திரைகள்
கழுவுவதற்குச் சவர்க்காரம் - சிறு
பாத்திரங்கள் படுப்பதற்குப்
பாய்துணிகள்
மண்ணெண்ணெய் மற்றும்
மசாலாப் பொருள்வகைகள்
எரிப்பதற்கு விறகு
எல்லாப் பொருள்களுமே
ஆனை விலை, குதிரை விலை!



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





அறியாயக் கொள்ளைவிலை!
ஆரால் முடியுமிந்த
அறாவிலைக்குப் பொருள் வாங்க?
உத்தியோகத்தருக்கு
உறுதுணையாய்க் காசோலை
மாசமுடிவில் வந்து விடுமதனை!
மாற்றித் தொலைப்பதற்கு
வங்கிகளில் பணமில்லை
வரவு வைப்பார் கணக்கினிலே
காசாக மாற்றுவதற்குக்
கனநாள்கள் ஆகிவிடும்?
உத்தியோகத்தர்கள்
ஒரு கொஞ்ச பேர்கள்தான்
மிச்சமாய் இருந்த
மிக அதிகர் என் செய்வார்?
நகைகளை வைத்திருந்தோர் படு
நட்டமாய் விற்றார்கரள்
எத்தனை நாளிவர்க்கு
இந்த நகைகளெல்லாம்
பத்தும்? - அதன் பிறகு
பாவி இவர் என் செய்வார்?
ஐயையோ, அம்மா! எம்
ஆசைப்பொன் நாடம்மா!
உன்னை நினைத்து இந்த
உயிர்துடிக்குதேயம்மா!
மேலிருந்து கீழிருந்தும் உன்
மேனியெல்லாம் புண்ணாக
குண்டுகள் போட்டார்கள் 'ஷெல்'
குறிபார்த்து அடித்தார்கள்
அந்த நிலையினிலும்
அம்மாவே உன் மடியில்
அயலட்டையோடு மன
ஆறுதலாய் நாமிருந்தோம்
உன்மடியில் நாமிருந்தால்
உண்ணா திருந்தாலும்
உள் மனத்திலேயுறுதி
உடையாமல் இருந்தோமே
வானம் இடிந்தாலும் - மனதில்
வல்லமை இந்ததம்மா!
உலகம் புரண்டாலும் ஒரு
உறுதி இருந்ததம்மா
செத்தாலும் உன்மடியில்
சுகமாக இருக்குமம்மா!
உப்பின் அருமை - அது
உள்ளவும் தெரியாது
அம்மா உனதருமை
அயல் மண்ணில் தெரிகிறது!
பொல்லாக் கொடுமையினால்
புலம் பெயர்ந்து வந்து விட்டோம்
பொருள் விட்டோம் போகிறது
பொன்னான மண்ணம்மா
உன்னைத் துறந்தோமே
உன்னைத் துறந்தோமே
இப்போது இங்கே
இயல்பான வாழ்வு கெட்டோம் - எம்
பிள்ளைகளின் பின்வாழ்வும்
பிழையாகிப் போனதம்மா!
தீயோர் செய் கொடுமையினால்
திக்கற்றுப் போய் விட்டோம்
உடலால் மெலிந்தோம்
உள்ளத்தால் செத்து விட்டோம்
அம்மாவே உன்மடியில்
அமைதியாய் வாழ்ந்த அந்த
பொன்னான காலப்
பொழுதை எதிர் பார்த்துள்ளோம்!

(1996 மார்ச் மாத நிலையில் எழுதியது வரதர்)

# தமிழீழ ஆதரவுக் கூட்டங்கள், பேரணிகள், மாநாடுகள்

சிறீலங்கா அரசின் தமிழ் இன அழிப்பு யுத்தத்தை கண்டிப்பது, தமிழீழ் மக்களுக்கு-அகதிகளுக்கு ஆதரவு தெரிவிப்பது, போராளிகளுக்கு ஆதரவு கொடுப்பது, இந்திய அரசை, அய்.நா. சபையை தலையிட கோருவது, இவற்றின் தலையீட்டை எதிர்ப்பது, ஆதரவு மட்டும் கொடுக்க கோருவது என இலங்கைக்கு வெளியில் இந்தியாவில், அய்ரோப்பிய அமெரிக்க நாடுகளில் பல தமிழீழ ஆதரவுப் போராட்டங்களை கடந்த 15 ஆண்டுகளில், இந்நாடுகளில் அகதிகளாக வாழ்வதால் பார்த்து வருகிறார்கள். தமிழீழ அகதிகளும், போராளிகளும் நடத்தி வரும் தமிழீழ ஆதரவுப் போராட்டங்களும், இந்திரா காந்தி, ராஜீவ் மரணங்களுக்கு நடத்திய அனுதாபக் கூட்டங்கள் ஒருவகையானது.

இன்னொருபுறம் இந்தியாவில் நடந்த தமிழீழ ஆதரவுப் போராட்டங்கள் இரண்டு வகையானது. ஒன்று இந்திய மத்திய-மாநில அரசுகள், ஆளும் வர்க்க கட்சிகள் செய்த ஆதரவு. 1983 முதல் நடந்த அரசு கதவடைப்பு (பந்த்) ஒருநாள் அரசு ஊழியர்களின் ஊதிய உதவி, ஆளும் வர்க்க கட்சிகள் நடத்திய கூட்டம், பேரணி, மாநாடு எனப் பல. மதுரையில் கலைஞர் தலைமையில் (TESO) 'தமிழீழ ஆதரவு மாநாடு', MGR கொடுத்த ரூ.4 கோடி நிதி உதவியும், மத்திய அரசு போராளிகளுக்கு ஆயுதம், பயிற்சி முகாம், நிதி என உதவியது உலகறிந்த செய்தி. 1985 இல் இந்திய அரசின் 'நடுநிலைமையுடன்' சிறீலங்கா அரசுக்கும்-போராளி இயக்கங்களுக்கும் இடையில் பூட்டான் தலைநகர் திம்புவில் பேச்சுவார்த்தை நடத்த உதவியது. போராளிகள் திம்புக் கோரிக்கைகளில் உறுதியாக நின்றதால் JR அரசு பேச்சுவார்த்தையில் பின் வாங்கியதால் கோபம் அடைந்த இந்திய அரசு போராளிகளின் பிரதிநிதிகளான அண்டன் பாலசிங்கம், சந்திரகாசன், சத்தியேந்திராவை நாடு கடத்தியது. போராளி இயக்க தலைவர்களை வீட்டுக் காவலில் வைத்தது. 1987 இந்திய - இலங்கை (J.R.-ராஜீவ்) ஒப்பந்தத்தின் பின் தமிழீழ ஆதரவுப் போராட்டங்களை முற்றுமுழுதாக கைகழுவிவிட்டது. 87-97 வரை மத்திய - மாநில அரசுகளின் தமிழீழ ஆதரவு என்பது, இந்திய தலையீட்டை ஆதரிக்கும் போராளி இயக்கங்கள், அகதிகள் மத்தியில் இயங்கும் சந்திரகாசன் அமைப்புக்கான மறைமுக-நேரடி ஆதரவாக மாறியுள்ளது. இக்காலத்தில் தமிழீழ அகதிகளுக்கு - போராளிகளுக்கு ஆதரவான தமிழ்நாட்டு மக்களின் போராட்டங்களின் குரல் வளையை நெரிக்கும் வேலையும் நடத்தி வருகிறது. இன்று தமிழீழ ஆதரவு என்பதும் புலி ஆதரவு என்பதும் ஒன்றாக அனுகப்படுகிறது.

இரண்டாவது தமிழ்நாடு, கர்நாடக தமிழ்மக்களின் - மக்கள் அமைப்புக்களின் தமிழீழ ஆதரவு, 1983-இல் ''தமிழீழ மக்களுக்கு ஆதரவளிப்போம்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இந்திய இராணுவ தலையீட்டை எதிர்ப்போம்'' ''தமிழீழ போராளிகளை ஆதரிப்போம்-இந்தியா தலையிட வேண்டும்'' ''தமிழீழ போராட்டத்தை ஆதரிப்போம்-தமிழீழ அகதிகளுக்கு உதவுவோம்''. 1985-இல் ''நாடு கடத்தலை'', போராளிகள் மீதான நிர்ப்பந்தங்களை எதிர்த்து நடந்த போராட்டங்கள்'', (இந்திய அரசு நாடு கடத்தலை வாபஸ் வாங்கியது) ''87-இல் இலங்கை-இந்திய ஒப்பந்த எதிர்ப்பு-ஆதரவு போராட்டங்கள்'' இந்திய அமைதிப்படைக்கு(?) எதிரான, பின்வாங்கக் கோரிய மனிதச்சங்கிலிப் போராட்டங்கள் (இந்தியப் படை வாபஸ் வாங்கியது), 92-இல் அகதிகள் திருப்பி அனுப்பப்படுவதை எதிர்த்து நடந்த போராட்டங்கள் ''அகதிகளை வெளியேற்றாதே; போராளிகளை இழிவுபடுத்தாதே'', 94-இல் திருச்சியில் புலம்பெயர்ந்தோர் ஆதரவு மாநாடு. 95-இல் யாழ் மீதான சிறீலங்கா அரசின் தாக்குதலை கண்டித்து நடந்த போராட்டங்கள் தமிழ் மக்கள் இசைவிழாவை நிறுத்தி நடந்த யுத்த எதிர்ப்பு போராட்டம், அமெரிக்கத் தூதுவரகத்தின் முன் நடந்த போராட்டம், கர்நாடகத்தை நோக்கினால் எல்லா தமிழீழ போராளிகளையும், 1984-இல் ஒரே மேடையில் வைத்து நடந்த ''தமிழீழ ஆதரவு மாநாடு'', 88-இல் இந்திய அமைதிப்படையை(?) எதிர்த்து நடத்திய ''தீப்பந்த ஊர்வலம்'', 95-இல் ''மனிதச் சங்கிலிப் போராட்டம்'', ''96-இல் தமிழீழ ஆதரவு மாநாடு. இவற்றுடன் இந்தியாவின் பிற மாநிலங்களில் மக்கள் அமைப்புக்கள் நடத்திய தமிழீழ ஆதரவு, இந்திய இராணுவ தலையீடு எதிர்ப்பு பேராட்டங்களும் அடங்கும். இவையெல்லாம் தமிழீழ மக்களின் விடுதலைப் போராட்ட வரலாற்றில் எழுதப்பட வேண்டியவை.

இந்தியாவில் 1983 தொடக்கம் நடந்துவரும் தமிழீழ ஆதரவு, இந்திய தலையீடு-எதிர்ப்புப் போராட்டங்களையும் தமிழீழ அகதிகள் நேரடியாக கண்டார்கள். இன்று தமிழீழ அகதிகளும், போராட்டமும் மிக நெருக்கடியான காலகட்டத்தில் உள்ளது. மீண்டும் இத்தகைய ஆதரவுப் போராட்டங்கள் பரவி வருவதையிட்டு மகிழ்ச்சி அடைகிறார்கள், அகதிகள் என்ற முறையில் வரவேற்கிறார்கள்.

சந்திரிகா அரசு தமிழ் அகதிகள் நாட்டைவிட்டு வெளியேறுவதை உள்நாட்டில் திட்டமிட்டு நசுக்கி வருகின்றது, சோதனைச் சாவடிகளில் தடுத்து நிறுத்துகிறது. இந்திய அரசு திட்டமிட்டு அகதிகள் தமிழ்நாட்டுள் தஞ்சம் புகுவதை கடலிலேயே தடுக்க முனைகிறது, புலிகள் அகதிகள் எல்லை தாண்டி போவதை இப்போது தடுக்கவில்லை. உண்மையில் தமிழீழ அகதிகளின் நலனில் யாருக்கும் அக்கறையில்லை. அகதிகளின் எதிர்காலம் அகதிகளின் கைகளால், போராட்டங்களால் தீர்மானிக்கப்பட வேண்டும். உலகின் ஒவ்வோர் மூலையிலும் உள்ள அகதிகளின் நிலையும் இதுதான் என்பதை கடந்த 15 வருட யுத்தத்தின் மத்தியிலான அகதிவாழ்க்கையிலிருந்து புரிந்து கொண்டுள்ளார்கள். தமது வாழ்வை தாமே உத்தரவாதப்படுத்திக் கொள்ள உள்நாட்டிலும் - உலக நாடுகளிலும் போராடியாக வேண்டியுள்ளது.

தமிழீழ அகதிகளின், போராட்டத்தின் எதிர்காலம் எப்படி இருக்க வேண்டும் என நாம் விரும்புகிறோம், அதற்கு அகதிகள் போராட்ட ஆதரவு எப்படி இருந்தால் நல்லது என நாம் நினைப்பதை உங்கள் முன்வைக்கிறோம். தமிழீழ ஆதரவு சக்திகள் முன் நமது உளக்கிடக்கையை உலகம் பூராவும் முன்வைக்கிறோம். முதன் முதலாக அகதிகள் மத்தியில் இருந்து வரும் குரலை காதுகொடுத்து கேளுங்கள், கண்திறந்து மனம் திறந்து படியுங்கள்; அகதி ஆதரவு தமிழீழ போராட்ட ஆதரவை உலகம் முழுவதும் பரப்புங்கள்.



## ஏன்? எப்படி அகதிகளானோம்?

பிரித்தானிய கொலனிய ஆட்சியில் இருந்து 1948-இல் இலங்கை நவ கொலனியாக மாறியது; சிங்கள பௌத்த சுரண்டல் வர்க்கத்தின் - வல்லரசுகளின் தமிழ் இன ஒடுக்குமுறை, முதலாவது தேர்தலில் மலையக தமிழ் மக்களின் வாக்குரிமை, குடியுரிமை பறிப்புடன் தொடங்கியது. படிப்படியாக வடக்கு, கிழக்கு பூர்வீக தமிழ் மக்கள் மேலான இன ஒடுக்குமுறையாக வளர்ந்தது. 1956-இல் தனிச் சிங்கள மொழி (''ஸ்ரீ'') சட்டத்தின்மூலம் தேசிய இன ஒடுக்குமுறைக்கு ஒரு வடிவத்தை வெளிப்படுத்தியது. தமிழ் மக்களிடம் இன ஒடுக்குமுறைக்கு எதிரான போராட்டம் கருக் கொண்டது. 1977 திறந்த பொருளாதாரக் கொள்கையுடன் ஆட்சிக்கு வந்த J.R. அரசு இன வெறியுடன் நடத்திய இனக் கலவரம் தெற்கில் இருந்த தமிழர்களை வடக்கு நோக்கித் தள்ளியது. "லங்கா ராணி" கப்பல் மூலம் நூற்றுக்கணக்கில் உள்நாட்டிலேயே அகதிகளானார்கள். 1983-இல் நாடு தழுவிய அளவில் நடந்த "கறுப்பு யூலை படுகொலை"யில் இந்திய அரசு அனுப்பிய "சிதம்பரம்", "அக்பர்" கப்பல்கள் வழியாக தெற்கில் இருந்து ஆயிரக்கணக்கில் தமிழீழம் நோக்கி அகதிகளாக வந்தனர். அதே வேகத்தில் 80000 ஆயிரம் தமிழீழ அகதிகள் நாட்டுப் படகுகளில் தமிழ்நாட்டுக்கும் அகதிகளாக சென்று தஞ்சம் அடைந்தனர்.

சிறீலங்கா அரசின் இன ஒடுக்குமுறை, இன அழிப்பு யுத்தமாக வளர்ந்தது. இலங்கையிலும் இந்தியாவிலிருந்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தும் வசதியுள்ள தமிழீழத்தவர்கள் அய்ரோப்பிய, அமெரிக்க நாடுகளுக்கு அரசியல் தஞ்சம் கோரிச் சென்றனர். 1987-இல் இலங்கை-இந்திய ஒப்பந்தம் அமைதியை தரும் என நம்பியவர்கள், இந்தியாவில் இருந்து மீண்டும் இலங்கைக்கு வந்தனர். ஆனால் இந்திய அமைதிப்படை(?) யுத்தம், பழைய அகதிகள், புதிய அகதிகள் என மேலும் ஆயிரக்கணக்கில் இந்தியாவுக்குள் தஞ்சம் அடையத் தூண்டியது. 91-இல் ராஜீவ் மரணத்தின் பின் இந்திய அரசின் நிர்ப்பந்தம் காரணமாக 40,000 அகதிகள் திருப்பி அனுப்பப்பட்டனர். இலங்கையில் தற்காலிக அகதி முகாம்களில் பலர் இருக்க வைக்கப்பட்டனர்.

பிரேமதாச அரசு நடத்திய யுத்தம் உள்நாட்டிலும் அகதி முகாம் வாழ்வை வளர்த்தது. சந்திரிகா அரசின் சமாதானத்துக்கான யாழ் படையெடுப்பு மூன்று இலட்சம் தமிழ் மக்களை முகாம்களில் அல்ல தெருக்களில் அகதிகளாக்கியுள்ளது.

கிளிநொச்சி மீதான அரச படையெடுப்பு மீண்டும் இந்தியாவுக்குள் தமிழீழ அகதிகளை தஞ்சம்புக தூண்டியுள்ளது. கிழக்கிற்கும், தெற்கிற்கும், இந்தியாவுக்கும் அகதிகள் செல்வதை தடுக்க சிறீலங்கா அரசு வவுனியாவில் வேப்பங்குளம், பூந்தோட்டம் சிறப்பு முகாம்களில் 13,000 அகதிகளை தடுத்துவைத்திருக்கிறது. (PLOT போன்ற இயக்கங்கள்கூட அரசின் இந்த நடவடிக்கைகளை கண்டித்து ஊர்வலம் நடத்தும் அளவுக்கு அகதிகள்மேல் அரசின் அடக்குமுறை உள்ளது.) 91-இல் புலிகள் வடக்கில் இருந்து முஸ்லிம் மக்களை விரட்டியதன் மூலம் 50,000 பேர் உள்நாட்டில் அகதிகளானார்கள். இந்தியாவில் 2 இலட்சம் அகதிகள். மொத்தத்தில் உள்நாட்டிலும் உலகம்பூராவும் 10 இலட்சம்வரை தமிழீழ அகதிகள் உள்ளோம். 1977 இலிருந்து 1997 வரையிலான அகதிகளின் கதை இது தான்.

# இந்தியாவில் தமிழீழ அகதிகள் நிலை



1996 யூலை புள்ளி விபரப்படி தமிழ்நாட்டில் தமிழீழ அகதிகள்:

| மாவட்டம் | முகாம்களின் தொகை | மக்கள் தொகை | மொத்த குடும்பங்கள் |
|---|---|---|---|
| இராமநாதபுரம் | 05 | 6435 | 1651 |
| வட ஆற்காடு | 09 | 4852 | 1236 |
| தென் ஆற்காடு | 06 | 3170 | 779 |
| சம்புவராயர் | 12 | 4286 | 1113 |
| செங்கை M.G.R. | 09 | 4296 | 1069 |
| சிதம்பரனார் | 03 | 2018 | 486 |
| காமராசர் | 07 | 4463 | 1105 |
| கன்னியாகுமரி | 05 | 1667 | 422 |
| நெல்லை கட்ட - பொம்மன் | 07 | 3686 | 939 |
| சேலம் | 12 | 4738 | 1307 |
| தர்மபுரி | 13 | 4778 | 1215 |
| பெரியார் | 07 | 5025 | 1285 |
| கோவை | 15 | 3842 | 979 |
| திண்டுக்கல் | 08 | 4653 | 1169 |
| பசும்பொன் தேவர் | 07 | 4367 | 1125 |
| மதுரை | 04 | 7010 | 1797 |
| திருச்சி | 03 | 4373 | 1175 |
| புதுவை | 05 | 6526 | 1700 |

அகதி முகாம்களுக்கு வெளியே தங்கியுள்ள, பொலிசில் பதிவு செய்துள்ளவர்கள் 1 இலட்சம் வரையுள்ளனர்.

இவற்றைவிட வெளியில் பதிவு இன்றியும், தமிழ்நாட்டில் தமது நிரந்தர வாழ்வை தொடங்கிவிட்டவர்கள் 500 குடும்பங்கள் வரையுள்ளனர். எல்லாவற்றுக்கும் மேலாக இந்திய இராணுவத்துடன் இலங்கைக்கு வந்து பின் இந்தியப் படையுடன் மீண்டும் வெளியேறி இந்தியாவில் மத்திய அரசின் பாதுகாப்பு, கண்காணிப்புக்குக் கீழ் உள்ள வரதராஜ பெருமாள், ENDLF தலைமைகளின் துரோகத்தனத்துக்கு பலியான போராளிகள், போராளிக் குடும்பங்கள், நெருங்கிய ஆதரவாளர்கள் ஒரிசா மாநிலத்திலும், கர்நாடகாவிலும் ஆயிரக்கணக்கில் உள்ளனர். இவற்றுக்கு புள்ளி விவரம் கிடையாது. இவர்களைத்தான் கலைஞர் 1991-இல் அந்தமான் தீவுக்கு அனுப்புமாறு மத்திய அரசுக்கு பரிந்துரைத்தாக கூறியுள்ளார்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# அகதி முகாம்களிலுள்ள மக்கள் தொடர்ந்து முகங் கொடுத்து வரும் முக்கிய பிரச்சனைகள்

- அய்.நா. சபையின் அகதிகளுக்கான மனிதவுரிமை கொமிசன் சட்டத்தின்படி இந்திய மத்திய - மாநில அரசுகளால் தமிழீழ அகதிகளுக்கு "அகதி அந்தஸ்து" வழங்கப்படவில்லை. இதனால் அகதிகள் அய்.நா. அகதிகள் ஆணையரின் உதவியையோ, வேறு சர்வதேச அமைப்புக்களின் உதவியையோ பெற முடியாதுள்ளனர்.
- அகதிகளுக்கான அரசின் உதவியானது அகதி குடும்பத் தலைவருக்கு 150 ரூபா, 12 வயதுக்கு மேலுள்ளவர்களுக்கு 120/-, 12 வயதுக்கு கீழ் உள்ள முதல் பிள்ளைக்கு 75/- மற்றய பிள்ளைகளுக்கு ரூ. 37.50 பைசா ஒரு மாதச் செலவுக்கு கொடுக்கப்படுகிறது. ஒருநாளுக்கு அரிசி 12 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு 400 கிராம், 12 வயதுக்கு கீழ் உள்ளவர்களுக்கு 200 கிராம் எனவும், குடும்பத்துக்கு சீனி 2Kg. கூடியது. மண்ணெண்ணெய் மாதத்துக்கு 3 லிட்டர் முதல் 10 லிட்டர் வரை. இந்த உதவிப்பணத்தை - பொருளை வைத்து அகதி வயிற்றின் எந்த மூலையை நிரப்ப முடியும்.
- அகதிகள் முகாமுக்கு வெளியே வேலைக்கு போக-வர இருந்த சுதந்திரம்கூட குறைக்கப்பட்டுள்ளது. காலை 7 மணிக்கு பின் வெளியே சென்று மாலை 6 மணிக்கு முன் உள்ளே வரவேண்டும். இந்த நேரக்கட்டுப்பாட்டுள் யார், எங்கு வேலை கொடுப்பார்கள். இரவு நேர வேலையும், தூர இடங்களுக்கு சென்று வேலை செய்வது தடுக்கப்பட்டுள்ளது.
- முகாம்களில் சீர்திருத்த சேவைகள், உதவிகள் செய்து வந்த தொண்டு நிறுவனங்கள்கூட (சந்திரகாசனின் அமைப்பை தவிர) உள்ளே வர தடைவிதிக்கப்பட்டுள்ளது.
- அகதிகள் வெளியூர், அல்லது மற்றைய முகாம்களிலுள்ள உற்றார், உறவினரை சந்திக்க செல்லவேண்டின் வருவாய் ஆய்வாளர் முதல் தாசில்தார் வரை அனுமதிக் கையொப்பம் வாங்கிச் செல்ல வேண்டும். அதுவும் கூடியது 3 நாட்களுக்குத்தான். அனுமதி இன்றி போனாலோ, ஒரு நாள் தாமதம் ஆனால் அதிகாரிகள் முதல் கியூ பிரிவு வரை விசாரணைக்குள்ளாக வேண்டும்; அனுமதிக்கும் - விசாரணைக்கும் இலஞ்சம் கொடுக்க வேண்டியுள்ளது.
- மண்டபம், கொட்டப்பட்டு, விளாங்குடி, பெரியார் நகர், ஆணையூர் முகம்கள் மட்டுமே ஒழுங்காக கட்டப்பட்டவை. மற்றைய முகாம்களில் பெரும்பாலானவை ஒதுக்குபுறமாக உள்ளதுடன், வெய்யில் மழைக்குக்கூட தாங்கக்கூடியனவாக இல்லை, புயல் மழை கேட்கவே வேண்டாம். அகதி குடிசைகள் பழுதுபார்த்து தரும்படி பேசக்கூட முடிவதில்லை.
- பெரும்பாலான முகாம்களில் மல சல கூட வசதி இல்லை. தண்ணீர், மின்சாரம் இல்லை, மின்சார இணைப்புள்ள சில முகாம்களில் எப்போது என்ன நடக்கும் என்ற வகையில் தாறுமாறான பாதுகாப்பற்ற முறையில் உள்ளது. மல சல கூட பிரச்சனைகளால் நோய் தொற்று அதிகமாக உள்ளது.
- உள்ளூர் பொலிசார், முகாம் பொலிசார், உளவுப் பிரிவினர், அதிகாரிகள் இவர்களின் கையூட்டு தொந்தரவுக்கு எல்லை இல்லை. மறுத்தால் எதிர்த்தால் புலிகளுடன் தொடர்புபடுத்தி விடுவர், சில முகாம்களில் பொலிசு நிலைய வளாகம் சுத்திகரிக்க அகதிகளை நிர்ப்பந்தப்படுத்தி கூட்டிச் செல்கிறார்கள், இளம் ஆண்களும்-பெண்களும் பாலியல் பலாத்காரத்துக்கான நிர்ப்பந்தங்களை முகங் கொடுக்கின்றனர். இவற்றை எதிர்த்தால் விசாரணை இன்றி, முன்னறிவித்தல், உறுதிப்படுத்தல் இன்றி சிறப்பு முகாம்களுக்கு மாற்றிவிடுவது கேட்டு கேள்வி இன்றி நடக்கிறது. மதுரை முகாம் ஒன்றில் ஒரு பெண்ணை பலாத்காரப்படுத்துவதில் ஏற்பட்ட மோதலில் ஒரு பொலீஸ்காரர் தலைமைக் காவலர் ஒருவரைச் சுட்டுக் கொன்றார். வேலூர் சிறப்பு முகாமில் பொலீசாரால் ஒரு பெண் பாலியல் உறவுக்கு கட்டாயப்படுத்த அதை மறுத்த பெண்ணை கஞ்சா வழக்குபோட்டு சிறையில் அடைக்கப்பட்டார். இதுபோன்றவிசயத்தை மணப்பாறை முகாமில் கண்டித்த 85 வயது கந்தையாவை புலி எனக் கூறி சிறப்பு முகாமுக்கு மாற்றினர் அதிகாரிகள்.
- அகதிகளின் அன்றாட வாழ்வு, பசி, பட்டினி, கர்ப்பிணிப் பெண்களுக்கு சரியான மருந்துகள் இல்லை, பிள்ளைகளுக்கு ஊட்டச் சத்துக்கு பால் இல்லை, வேலைக்கு போக வழியில்லை, வேலை இல்லை, எல்லாவற்றுக்கும் பணம் இல்லை. இவற்றால் விரக்தியடைந்த சிலர் தற்கொலை செய்ய முயல்கின்றனர்,



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



சிலர் அச்சமூகத்தில் நிலவும் சீரழிந்த சமூக நடவடிக்கைகளுக்கும் விரைவாக பணம் சம்பாதிக்கும் தொழில்களுக்கும் இரையாகியுள்ளனர்.

- 135 முகாம்களில் 15,000க்கும் மேலான விவசாயக் கூலிகள் உள்ளனர். இவர்கள் கடுமையான உடல் உழைப்பு வேலைகள் செய்கின்றனர். தெருப்போடும், புகையிராத பாதை போடும்-பழுதபார்க்கும் தின, வாரக் கூலிகளாக வேலைசெய்கின்றனர். ஒப்பந்தக்காரர்கள் சுருட்டியது போக மீதம் கைக்கு கிடைக்கிறது. இவர்களைப் போன்றவர்கள்தான் முகாம் வாழ்விலும் கடைநிலை வாழ்வில் கஞ்சிக்கும் ஏங்கி, எதிர்காலத்தை கேள்விக்குள்ளாக்கி நிற்கவேண்டிய நிலையுள்ளது.
- அகதி மாணவ-மாணவியர்களின் கல்விக்கும் கூட சாவுமணி அடிக்கப்பட்டுள்ளது. கல்விக்கு இருந்த தடை, தி.மு.க. ஆட்சிக்கு வந்ததும் நீக்கப்பட்டுள்ளது. ஆனால் ஆயிரம், இலட்சம் என்று இலஞ்சம் கொடுத்துப் படிக்க அகதிகளுக்கு என்ன வழி? கல்வி கற்கும் வயதில் உள்ள சிறுவர்கள் லாட்டரி சீட்டு விற்றுப் பிழைக்கின்றனர். மதுபானக் கடை, மளிகைக் கடைகளில் அற்ப கூலிக்காக தமது மழலைக் கனவுகளை தொலைத்து குழந்தைத் தொழிலாளர்களாக வேலை செய்து மாய்கின்றனர். மேற்படிப்பை தொடர முடியாத ஆண்-பெண் மாணவர்கள் எதிர்காலத்தை பறிகொடுத்த விரக்தியில் தத்தளித்துப் போயுள்ளனர்.

## சிறப்பு முகாம்கள்:

- சிறப்பு முகாம்களில் பாதுகாப்பு என்ற பெயரில் 24 மணி நேரமும் சிறிய அறைகளிலேயே அடைத்து வைக்கப்படுகின்றனர். காற்றோட்ட வசதி இல்லாத இவ் அறைகளில் ஒன்றுக்கு மேற்பட்டவர்கள் அடைத்து வைக்கப்படுவார்கள். இவ் எண்ணிக்கை ஐந்து ஆறையும் தாண்டும். துர்நாற்றமும், வெப்பமும் நிறைந்திருக்கும் இந்த காரை பெயர்ந்த அறைகளில் தான் இவர்கள் உண்ண, உறங்க வேண்டும்; மல சலம் கழிக்க வேண்டும். கொசுவும், மூட்டைப் பூச்சியும் இவர்களுடன் வாசம் செய்யும். எந்தவித பொழுதுபோக்கும் அற்ற, மன அமைதியின்மையை ஏற்படுத்துகின்ற இயந்திர வாழ்க்கை அவர்களை மனநோய் பீடித்தவர்களாக மாற்றிவிடுகிறது. அரசினுடைய ஏவல் நாய்களின் கெடுபிடிகளும், வக்கிர-வன்முறை அத்துமீறல்களும் அவர்கள் மனதின் அடி ஆழ உணர்வுகளைக் காயப்படுத்தி அவர்களின் இயந்திர வாழ்க்கையை மேலும் அமைதியின்மை உடையதாக மாற்றுகிறது.
- இவ்வாறு கொத்தடிமை வாழ்நிலைக்குள் தள்ளப்பட்ட இம் மக்களின் எண்ணிக்கை முகாமிற்கு முகாம் மாறுபட்டாலும்கூட இவர்கள் எதிர்கொள்ளும் அட்டூழியங்கள் ஒரே மாதிரியனதாக இருக்கிறது.
- அரிசியை மட்டுமே பங்கீட்டில் வழங்கும் அரசு நாளொன்றுக்கு 5 ரூபாவே ஒரு அகதிக்கு வழங்குகிறது. இதில் விறகிற்கு மூன்று ரூபாயாவது தேவையானதாக இருப்பதால் மீதி இரண்டு ரூபாயில்தான் தனது கஷ்ட ஜீவனத்தை திட்டமிட வேண்டியிருக்கிறது. இங்கு திட்டமிடுவது என்பது பட்டனி கிடப்பது என்றுதான் அர்த்தம். வெளியில் உள்ள உறவினர்களின் உதவியை நாடவும் அனுமதி இல்லை. படிப் பணத்தை அதிகரிக்கவும், வேலை வழங்கும்படியும் கோரிய போதிலும் அரசு இவற்றுக்கு செவிமடுக்கவில்லை. அன்றாட ஜீவன கஷ்டங்களை சகித்துக் கொள்ள முடியாது விரக்தியடைந்த தங்கவேலாயுதம் தனது மனைவியோடு தற்கொலைக்கு முயற்சிக்கும் அளவிற்கு அரசின் பாரபட்சமான நெருக்குதல்கள் இம் மக்களை சிதைத்து விடுகிறது.
- பொழுதுபோக்கு அம்சங்கள் மறுக்கப்படுகின்ற சிறப்பு முகாம் அகதிகள் செய்தித்தாள், வார-மாத இதழ்கள், மற்றும் தொலைக்காட்சி, வானொலி போன்றவற்றை பெறுவதில் இருந்தும் தடுத்து வைக்கப்பட்டிருக்கிறார்கள். இதன்மூலம் வெளிஉலக நிகழ்வுகளில் இருந்தும் முற்றிலுமாக துண்டிக்கப்பட்டிருக்கிறார்கள்.
- சிறப்பு முகாம்களில் மருத்துவ வசதி எதுவும் இல்லாத நிலையில் வட்டாட்சியர், கியூ உளவு பிரிவு அதிகாரிளின் அனுமதி பெற்ற பின்பே பொலீசுக் காவலுடன் மருத்துவமனை செல்ல முடியும். திடீரென்று ஏற்படும் தீவிரமான நோய்களுக்கான முதல் உதவி வசதிகூட கிடையாது. அப்போதுகூட மேற்கூறிய விதிகளின்படியே மருத்துவமனைக்கு செல்ல முடியும். இதனால் வேலூர் சிறப்பு முகாமில் ஒரு குழந்தை இறக்க நேரிட்டது. தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெறுவதற்கும் அனுமதிக்கப்படுவது இல்லை.
- நெருங்கிய உறவினராக இருந்தால் மட்டுமே சிறப்பு முகாமில் உள்ள ஒருவரை நேர்காண முடியும். நேர்காண்பதற்கு முன் தனது புகைப்படம் ஒட்டிய விண்ணப்பத்தின் மூலம் வட்டாட்சியர் மற்றும் கியூ பிரிவின் அனுமதியை பெற வேண்டும். கெடுபிடியான விசாரணைக்கு பின்னரே பார்க்க அனுமதிக்கப்படுவர். தடா சட்டத்தில் உள்ளவரை நேர்காண்பதற்குக் கூட இத்தனை கெடுபிடிகள், விதிகள் இருப்பதில்லை.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



- ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் வேறு வேறு சிறப்பு முகாம்களில் பிரித்து வைக்கப்பட்டுள்ளனர். ஒருவரை ஒருவர் நேர் காண 15 நாட்களுக்கு ஒரு தடவைதான் அனுமதி உண்டு. இவ்வாறு பிரித்து வைக்கப்பட்டுள்ள குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் தம்மை ஒரே முகாமில் சேர்த்து வைக்கும்படி கோரியும், அதற்காக அவ்வப்போது உண்ணாவிரத போராட்டம் நடத்தியும் வருகிறார்கள்.

- சிறப்பு முகாம் வதைகளை தாங்கிக் கொள்ள முடியாத காரணத்தால் யுத்தத்தில் உடல் ஊனமுற்றவர்கள் தங்களை "செஞ்சிலுவைச் சங்கத்தின்" மூலமாக தமிழீழ பகுதிக்கு தம்மை அனுப்பி வைக்கும்படி கோரி வருகின்றனர். அவர்களின் கோரிக்கையை அரசு அலட்சியம் செய்கிறது.

தமிழ்நாட்டிலுள்ள அகதிகள், சிறப்பு முகாம் அகதிகள் இவ்வளவு சிக்கல்களை எதிர்கொள்கின்றனர், இவற்றுக்கு மத்தியிலும் தமது உயிருக்குள்ள உத்தரவாதம் அவர்களை இங்குள்ள அகதி வாழ்விலிருந்து வேறுபடுத்திப் பார்க்க வைக்கிறது. இலங்கையிலுள்ள அகதிகள் இந்தியாவுக்குள் தஞ்சம் புக விரும்புவதன் அடிப்படை 'உயிர் உத்தரவாதம்' ஒன்றுதான்.

## தமிழீழ அகதிகளை இந்திய அரசு எவ்வாறு அணுகுகிறது?

உலக அகதிகளின் மொத்த தொகையில் தெற்காசிய நாடுகளின் அகதிகள் 12% சதவீதமாக உள்ளனர். தமிழீழ அகதிகள், பூட்டான், நேபாளம், வங்களாதேஷ் அகதிகள் இந்தியாவுக்குள் தஞ்சம் கோரியுள்ளனர். பாகிஸ்தானுக்கு எதிரான கிழக்கு வங்களாதேஷ் மக்களின் தேசிய விடுதலைப் போராட்டத்தில், 8 இலட்சம் அகதிகள் இந்தியாவுக்குள் 1971-ல் இருந்தார்கள் அகதிகளை காரணம் காட்டி இந்திய அரசு வங்க



வங்களாதேஷின் 40,000 சக்மா அகதிகள், இந்தியாவின் திரிபுரா மாநில அகதி முகாம்களில் உள்ளனர். சிட்டகாங் மலைவாழ் மக்களின், "சாந்தி வாகினி" இயக்கத்தின் கடந்த 20 வருட போராட்டத்தில் 20,000 மக்களும், 2000 போராளிகளும் இறந்துள்ளனர். ஷேக் கசீனா அரசுக்கும் - PCJSS க்கும் இடையில் கடந்த மாதம் நடந்த பேச்சு வார்த்தையில், சிட்டகாங் மலைப்பகுதி உள்ளிட்ட மூன்று மாவட்டங்களில் போர் நிறுத்தம் ஏற்பட்டுள்ளது. பிராந்திய சுயாட்சி - மாவட்ட சுயாட்சி என்ற மட்டத்தில் நடக்கும் பேச்சு வார்த்தை அகதிகள் பிரச்சினையை தீர்க்குமா? தாய்மண் திரும்புவோமா? என திரிபுராவில் உள்ள அகதிகள் விழித்து நிற்கின்றார்கள்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



விடுதலைப் போராட்டத்தில் தலையிட்டது: முஜிபூர் ரகுமான் தலைமையிலான 'முக்திவாகினி' இயக்கத்துடன் கூட்டுச் சேர்ந்து பாகிஸ்தானுக்கு எதிரான யுத்தத்தில் வங்கத்தை பிரித்து தனிநாடாக்கியது, 96 மார்கழி 16-இல் பாகிஸ்தானுக்கு எதிரான இந்திய இராணுவத்தின் வெற்றியின், வங்கம் தனி நாடாகியதன் 25 ஆண்டு வெள்ளி விழாக் கொண்டாட்டம், விமரிசையாக கொண்டாடப்படுகிறது.

ஆனால் அன்று அகதிகளான வங்களாதேஷ் "சக்மா அகதிகள்" இந்தியாவின் திரிபுரா மாநிலத்தில் 40000 பேர் முகாம்களில் இன்றும் உள்ளனர். அவர்கள் தங்களுக்கு கொடுக்கப்படும் உணவும், உதவித் தொகையும் போதாது என தொடர்ந்து போராடி வருகிறார்கள். 94-ல் 10000 அகதிகள் திருப்பி அனுப்பப்பட்டார்கள். இந்த அகதிகள் பிரச்சினை பற்றி 96 மார்கழி 10-இல் இந்தியாவும் - வங்களாதேஷும் ஒரு ஒப்பந்தம் கூட செய்துள்ளனர். இந்தியாவுக்குள் உள்ள திபெத்திய அகதிகளும் தாய்லாமாவும், இந்தியாவுக்கு முதன்முதலாக போன சீன அதிபருக்கு ஜியாங் ஜமினுக்கு எதிர்ப்பு தெரிவிக்க அனுமதிக்கப்பட்டது. கர்நாடகாவில் நேபாளிய அகதிகள் தங்கள் கோரிக்கையை வலியுறுத்தி போராடுகின்றனர். ஆனால் தமிழீழ அகதிகள் தங்களின் அடிப்படை உரிமைகளை கேட்டால் சிறப்பு முகாம்களுக்கு அனுப்பப்படுகின்றனர். சிறீமா நோய்க்கு மருந்து செய்ய இந்தியா போனால், அகதிகள் முகாமை விட்டு வெளியே வரவே அனுமதி மறுக்கப்படுகிறது.

இன்று உலகளவில் ஒவ்வோர் அரசும் தனது நாட்டுக்குள் இன்னோர் நாட்டு அகதிகளை அனுமதிப்பது என்பது இன உணர்வை, இரக்கத்தை, பாரம்பரிய இரத்த உறவை, பாசத்தை, ஏன் மனிதநேயத்தைக் கூட கொண்டு அணுகவில்லை. குறிப்பிட்ட காலத்தில் அண்டை நாட்டுடன் ஆன உறவு, பிராந்திய - சர்வதேசிய நிலைப்பாட்டில் அந்நாட்டின் அரசியல் இராஜதந்திர தலையீட்டுத் தேவை. இவற்றில் வெளிப்படும் வெளியுறவுக் கொள்கை வழிகாட்டுதல் அணுகுமுறையில் இருந்தே "அகதிகள் பிரச்சினை" அணுகப்படுகிறது. இந்தியாவானாலும், அய்ரோப்பிய, அமெரிக்க அரசுகள் எதுவும் இதற்கு விதிவிலக்கல்ல. அகதிகளை தங்கள் நாட்டுக்குள் அனுமதிப்பதில் வெளியுறவுத் துறை கவனிக்கும் சில முக்கிய விடயங்கள் இதோ:

அ) குறித்த நாட்டு அகதிகளால் வரக்கூடிய அரசியல் இலாபம் / நஷ்டம். அகதிகளால் வரக்கூடிய ஆபத்தான அரசியல் விளைவுகள்.

ஆ) உள்ளே அனுமதிப்பதற்கும், வெளியேற்றுவதற்குமான கால அளவு, மனித அளவு.

இ) அகதிகள் வரவால் ஏற்படக்கூடிய சமூக பொருளாதார, கலாச்சாரத் தாக்கங்கள்.

ஈ) உள்நாட்டு பாதுகாப்புக்கும், அரசியல் ஸ்திர தன்மைக்கும் சர்வதேச ரீதியாக ஏற்படக்கூடிய தாக்கங்கள்.

உ) 'அகதி அந்தஸ்து' கொடுப்பதா? அல்லது தற்காலிக அகதி அல்லது மனிதாபிமான அனுமதி என்ற முறையில் அணுகுவதா?.

தமது நாட்டில் அனுமதிக்கப்பட்ட அகதிகளை காட்டியே இராணுவத் தலையீடுகள் செய்வதும் நடக்கிறது. (உ-ம்) இந்திய அரசு வங்கத்தின் சக்மா அகதிகளைக் காட்டி 1971-இல் பாகிஸ்தான் மீதும், இலங்கையின் தமிழ் அகதிகளை காட்டி 1987-இல் தமிழீழத்திலும் இராணுவத் தலையீடு செய்தது. இதே போல பர்மாவின் றோகின்யாஸ் அகதிகள் வங்களாதேஷில் இருக்கையில் "அகதிகளுக்கு ஆயுதம் கொடுத்து அனுப்பப்போவதாக" பர்மாவை பயமுறுத்தி, 1980களில் 1,92,467 றோகின்யாஸ் அகதிகளை பர்மா அரசு ஏற்றுக் கொள்ளும்படி செய்தது வங்கதேச அரசு, மறுபுறம் அகதிகளை நிர்ப்பந்தப்படுத்தி அனுப்பும் அரசியல் இராஜதந்திரம் பின்பற்றப்படுகிறது - (உ-ம்) 1980-இல் அசாமில், திரிபுராவில் வெளிநாட்டு அகதிகளுக்கு, வெளிமாநிலங்களிலிருந்து இடம் மாறிய அகதிகளுக்கு எதிராக தொடங்கிய அசாமியர்களின் போராட்டத்துக்கு பின், இந்திய அரசு சக்மா அகதிகளுக்கு திட்டமிட்டு உணவு, உதவித் தொகைகளை குறைத்தது, பாதுகாப்பு நிர்ப்பந்தங்களை ஏற்படுத்தியது, 92-இல் தமிழீழ அகதிகளையும் இந்த முறையில் இந்திய அரசு நிர்ப்பந்தப்படுத்தி 29,000 அகதிகளை இலங்கைக்கு திருப்பி அனுப்பியது கவனத்தில் கொள்ள முடியும்.

இந்திய அரசு 83-இல் 80,000 தமிழீழ அகதிகளை எந்த தடையும் இன்றி அனுமதித்தது. தமிழ்நாட்டுக்குள் சுதந்திரமாக நடமாடவிட்டது. போராளி இயக்கங்களுக்கு தங்குமிடம், பணம், பயிற்சி, ஆயுதம் என



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



எல்லாம் கொடுத்தது. தமிழீழத்தில் இருந்து இராணுவ பயிற்சிக்கு சென்ற போராளிகளின் படகுகளும், அகதிகளின் படகுகளும் கடலில் அக்கம்பக்கம் சென்றன. ஒரே கரையில் இறங்கினர். அகதி முகாம்களில் போராளிகள் வந்து பிரச்சாரம் செய்தனர். ஏன் இராணுவத்துக்கு ஆட்களைக் கூடச் சேர்த்துச் சென்றனர். முகாம்களுக்கு உள்ளும், வெளியிலும் போராளிகள் அகதிகளுக்கு தெரியக்கூடியதாக ஆயுதங்களைப் பதுக்கினர். இவையெல்லாம் இந்திய மத்திய - மாநில அரசுகளால், உளவுப்படை, பாதுகாப்பு படைகளால் அனுமதிக்கப்பட்டது. சில முகாம்களில் போராளிகள் எல்லை மீறி நடப்பதை அகதிகள் சுட்டிக்காட்டியபோது காவல் துறை கண்டுகொள்ளவில்லை. இன்றைக்கு...?

85-இல் திம்பு பேச்சு வார்த்தையின் பின் போராளிகளின் தொலைத் தொடர்புச்சாதனங்களை, ஆயுதங்களைப் பறித்த போது இதன் தாக்கங்கள் அகதி முகாம்களிலும் காணமுடிந்தது. 87 ஒப்பந்தத்தின் பின் அகதி முகாம்களுடன் போராளிகள் வைத்து இருந்த தொடர்புகள் படிப்படியாக தடுக்கப்பட்டது. 90களில் இந்திய இராணுவத்துடன் தமிழீழத்தில் கூட்டாக செயற்பட்ட 'துரோக இயக்க போராளிகளை அகதிகள் என்ற பெயரில்' இந்தியா இராணுவத்துடன் கூட்டி சென்றது. இந்திய அரசு 90 முதல் 95 வரை அகதி முகாம்களில் போராளிகளை - அகதிகளை பிரித்தது. சிறப்பு முகாம்களிலும், சிறைச்சாலைகளிலும் அடைத்தது. போராளிகளை ஆதரிக்கும் அகதிகளை, போராளிகளின் உற்றார் உறவினரைக் கூட சிறப்பு முகாமுக்கு அனுப்பினர். 'ராஜீவ் மரணத்தின்' பின் அகதி முகாம்கள் கூட குற்றவாளிகளின் கொட்டடிகளாக பாதுகாப்பு படைகளால், உளவுப் பிரிவினரால் பரிசோதிக்கப்பட்டது. சிவராசன், சுபா, தனு போன்ற ஆண் - பெண் அகதிகளின் உருவ அடையாளங்கள் கூட பதியப்பட்டது. பிரிட்டிஷ் ஆட்சியில் இருந்தபோது 'பிறன் மலைக் கள்ளன்' என்ற சாதி மக்களை குற்ற பரம்பரையாக அறிவித்தது. அந்தச் சாதியில் பிறந்த ஒவ்வொருவரின் கைரேகையையும் பதிவு செய்தது பிரிட்டிஷ் அரசு. அதேபோல் தமிழ்நாட்டு அரசு தமிழீழ அகதிகளின் கைரேகைகளை அங்க அடையாளங்களை பதிவு செய்தது கவனிக்கத்தக்கது.

இன்று தமிழ்நாட்டிற்குள் அகதியாக தஞ்சம் கோரும் தமிழீழ மக்களை கடலிலும், கரையிலும் கைது செய்து - புலியா? அகதியா? என பரிசோதிக்கிறது.

இத்தனையும் செய்த மத்திய - மாநில அரசுகள், இப்போதும் தமிழ்நாட்டுக்குள் இயங்கும் "இந்திய அரசு ஆதரவு இயக்கங்களான" ENDLF - EPDP போன்றவற்றை அகதி முகாம்களுள் வரவும், பிரச்சாரம் செய்ய - பத்திரிகை விநயோகிக்க அனுமதிக்கிறது. சில முகாம்களில் இயக்கங்களுக்கு ஆள் எடுக்கப்படுகிறது. ENDLF இயக்கம் 96 அய்ப்பசி மாதம் சென்னையில் இந்திய அரசு தலையிடக் கோரும்" பேரணியையும், மாநாட்டையும் நடத்த அரசு அனுமதித்தது.

அதே நேரம், இலங்கையில் போராடுகின்ற புலிகளுக்கு ஆதரவு தெரிவிக்கும், தமிழ்நாட்டின் தமிழ் இன உணர்வாளர்கள், தமிழீழ ஆதரவாளர்கள் கைது செய்யப்படுகிறார்கள்.

ஆனால் இந்தியாவின் தலையீட்டை இலங்கையில் கோரும் போராட்டங்களை, பேரணிகளை இந்திய அரசு அங்கீகரிக்கிறது; ஆதரிக்கிறது. சிறீலங்கா அரசுக்கு எதிரான ஆயுதப் போராட்டம் மூலம், இந்திய இராணுவத் தலையீட்டு உதவியுடன் தமிழீழம் அடைய நினைக்கும் ENDLF - EPDP இயக்கங்களும், இந்திய இராணுவ தலையீட்டுடன், ஆனால் காந்திய அகிம்சா வழி மூலம் தமிழீழம் அடைய பிரச்சாரம் செய்யும் சந்திரகாசனின் "ஈழ ஏதிலியர் மறுவாழ்வு கழகமும்" வெளிப்படையாக செயற்பட அனுமதியளிக்கிறது மத்திய - மாநில அரசுகள். நேரடியாகவும் - மறைமுகமாகவும் இவ் இயக்கங்களுக்கு உதவி வருகிறது. ஆனால் தமிழீழ அகதிகளுக்கு 15 ஆண்டுகளாகியும் "அகதி அந்தஸ்து" கொடுக்காத இந்திய அரசு எத்தகைய வெளியுறவுக் கொள்கையிலிருந்து தமிழீழ அகதிகளை அணுகி வருகிறது என்பதை புரிந்து கொள்ள முடியும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



| அகதிகளின் தாயகம் | புகலிடமடைந்த நாடுகள் | அகதிகளின் தொகை |
|---|---|---|
| • ஆப்கானிஸ்தான் | பாகிஸ்தான் | 3275000 |
| • ஆப்கானிஸ்தான், கர்ப்ஸ் | ஈரான் | 2800000 |
| • எல்சல்வடோர், குவாதிமாலா | அமெரிக்கா, கனடா | 1447200 |
| • வியட்நாம் | மெக்சிக்கோ | 356400 |
| • துருக்கி, ஆபிரிக்கா, கொங்கொங், வியட்நாம், இலங்கை | அய்ரோப்பிய நாடுகள் | 894000 |
| • மொசாம்பிக் | மலாவி | 822500 |
| • எத்தியோப்பியா, காட், சயர், உகண்டா | சூடான் | 767700 |
| • சூடான், சோமாலியா | எத்தியோப்பியா | 710200 |
| • எத்தியோப்பியா | சோமாலியா | 600000 |
| • வியட்நாம் | சீனா | 280500 |
| • நிக்கரகுவா, எல்சல்வடோர், கியூபா | கோஸ்ட்டாரிகா | 268600 |
| • ருவாண்டா, சயர், உகண்டா, வியட்நாம் | புருனே | 267500 |
| • வியட்நாம் | நியூசிலாந்து, ஆஸ்திரேலியா | 102600 |
| • கம்பூச்சியா, லாவோஸ், பர்மா | தாய்லாந்து | 99000 |
| • இலங்கை | இந்தியா | 175000 |

குறிப்பு: பாலஸ்தீனம், செச்சின்யா, கெய்தி, போஸ்னியா, குரோசியா, ஸ்லோவேனியா, பங்களாதேஷ், செர்பியா, நேபாள், திபெத் மற்றும் செயரில் உள்ள ருவாண்டா அகதிகள் இந்த பட்டியலில் இடம் பெறவில்லை. மேலும் சொந்த நாட்டிலேயே அகதிகளானவர்களின் பட்டியலும் மேலே தரப்பட வில்லை. உதாரணமாக இலங்கையில் தமிழீழ அகதிகள் 500000; இந்தியாவில் அகதியான உள் நாட்டு மக்கள் 250000.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# தமிழீழ ஆதரவாளர்களுக்கு, அகதிகளின் ஆதரவாளர்களுக்கு தமிழீழ அகதிகளின் வேண்டுகோள்

சிறீலங்கா அரசும், அமெரிக்கா தலைமையிலான வல்லரசுகளும், இந்திய அரசும் ஒரு எழுதப்படாத ஒப்பந்தத்தில் இருந்து கொண்டு தமிழீழ போராட்டத்தை நசுக்க எடுத்து வரும் நடவடிக்கைகள், அகதிகள் மேலான அச்சுறுத்தல்கள் உலகம் அறிந்த செய்தி, கடந்த சில மாதங்களாக இந்தியாவில், அய்ரோப்பிய அமெரிக்க நாடுகளில் L.T.T.E. யும், ENDLF ம், நடத்திவரும் தமிழீழ ஆதரவு போராட்டங்களைப் பார்க்கையில், இந்தியாவில் நடந்துவரும் மக்கள் அமைப்புக்களின் தமிழீழ ஆதரவு நடவடிக்கைகளை காண்கையில் தமிழீழ மக்களும் அகதிகளும் உயிர்மூச்சு விடக்கூடிய அளவுக்கு உலக மக்களின் ஆதரவு இருப்பதைப் பார்க்க முடிகிறது.

இவ் ஆதரவு நடவடிக்கைகள் கூட தூரநோக்குள்ள திட்டவட்டமான இலக்குகளை கொண்ட தொடர்ச்சியான போராட்டங்களாக இல்லை என்பதையும் கவனிக்க முடிகிறது. சிறீலங்கா அரசின் இன அழிப்பு யுத்தத்தை கண்டிப்பது, தமிழீழக் கோரிக்கைப் போராட்டம் சரி என முன் வைப்பது, தமிழீழ மக்கள் அகதிகளுக்கு ஆதரவு தெரிவிப்பது, இவற்றில் மட்டும் தான் ஒரே ஆதரவுக் குரலை கேட்க முடிகிறது. யுத்தத்தை நிறுத்தி அரசியல் தீர்வு காண்பதற்கான அரசியல் அடிப்படை முழக்கம், இந்திய அரசின் தலையீடு பற்றிய முழக்கம், தமிழீழ ஆதரவு என்பதே புலி ஆதரவு அல்லது புலி எதிர்ப்பு என்ற முழக்கங்களில் முரண்பட்ட ஆதரவுக் குரல்களே வெளிவருகின்றது.

தமிழீழ தேசிய விடுதலை யுத்தத்துக்கும், போராளி இயக்கங்களுக்கும் எத்தனை வயதோ அத்தனை வயது தமிழீழ அகதிகளுக்கும். அவர்களும் யுத்தத்தில் பிறந்து யுத்தத்தினூடே வளர்ந்துள்ளவர்கள்; வாழ்பவர்கள். சிறீலங்கா அரசின் தமிழ் இன அழிப்பு கொடூரங்களை, இந்திய இராணுவத் தலையீட்டின் போது நடந்த அட்டூழியங்களை, புலி அழிப்பது - புலியை அழிப்பது என்ற இயக்க மோதல்களை நேரடியாக முகங் கொண்டவர்கள் தமிழீழ அகதிகள்.

இன்று நடக்கும் தமிழீழ ஆதரவுப் போராட்டங்களில் "இந்திய அரசு தலையீட வேண்டும், மௌனம் சாதிக்கக் கூடாது", "சிறீலங்காவுக்கு அமெரிக்கா உதவுகிறது, தமிழர்களுக்கு இந்தியா உதவ வேண்டும்", "இந்துமா சமுத்திரத்தின் பாதுகாப்புக்கு இந்தியத் தலையீடு அவசியம்", "ஈழத் தமிழர்களை இந்திய அரசு காக்கத் தவறினால் தமிழ்நாடு கொதித்தெழும்", "தமிழீழம் பிரிவதற்கு இராணுவம் உதவினால் தமிழ்நாடு பிரிந்துவிடாது".

இத்தகைய ஆதரவுப் போராட்டங்கள், தீர்மானங்கள் அகதிகள் மத்தியில் மீண்டும் ஒரு அச்ச உணர்வை தோற்றுவிக்கிறது. இது தமிழீழ மக்களின் தேசிய விடுதலைப் போராட்டத்துக்கு எந்த நன்மையும் செய்யப் போவதில்லை என்பதைப் புரிந்து கொள்ள முடிகிறது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





ஒரு நாடு இன்னோர் நாட்டுக்குள் நடக்கும் மக்களின் போராட்டத்தில் ஏன் தலையீட வேண்டும். சிறீலங்கா அரசு சார்பாக இருந்தாலும், தமிழீழ போராளிகளுக்கு சார்பாக இருந்தாலும் ஏன் இந்திய அரசு தலையீட வேண்டும், தமிழீழ மக்களின் போராட்டத்தின் நியாயத்தை இந்திய அரசு அங்கீகரித்தால், தமிழீழ அகதிகளுக்கு ஆதரவு கொடுத்தால் அதுவே மிகப் பெரிய உதவியாக இருக்கும். உண்மையில் தமிழீழ மக்களின் அகதிகளின், போராட்டத்தின் நலனில் எந்த நாட்டு அரசுக்காவது அக்கறை இருந்தால் இதைச் செய்தால் போதும். எந்த நாட்டு மக்கள் அமைப்புக்கள் இதைச் செய்யும்படி தங்கள் நாட்டு அரசுகளை நிர்ப்பந்திக்கிறார்களோ அவர்கள்தான் உண்மையான தமிழீழ ஆதரவாளர்களாக விளங்க முடியும்.

தமிழீழத் தலைமைகளான TULF முதல் ENDLF, EPDP வரை "இந்திய அரசை தலையீடுமாறு" அன்றுமுதல் கோரி வருகிறார்கள். இதேபோல் இந்தியாவிலுள்ள சில இன, மொழி உணர்வு அமைப்புக்களும், ஆளுங் கட்சிகளும், திரிபுவாத கொம்யூனிஸ்டுக் கட்சிகளும் ஈழத் தமிழரைக் காக்க "இந்திய அரசு தலையீடுமாறு" அன்று முதல் கோரி வருகிறார்கள். இந்திய அரசு சிறீலங்கா அரசுக்கு ஆதரவளித்தால், தலையீட்டால், அநியாயம், பிற்போக்கு, ஆனால் தமிழீழப் போராளிகளுக்காக தலையீட்டால் நியாயம் முற்போக்காகி விடுமா?

உண்மையில் என்ன நடந்தது? இந்திய அரசு தனது விரிவாதிக்க வெளியுறவுக் கொள்கையில் இருந்து, போராளிகளுக்கு சார்பாகவும் செயல்பட்டது, சிறீலங்கா அரசுக்கு சார்பாகவும் செயல்பட்டு வருகிறது. முக்கியமான காலகட்டத்தில் தமிழ் மக்களுக்கு மட்டுமல்ல, சிங்கள மக்களுக்கும் எதிராக இந்திய அரசு செயல்பட்டுள்ளது. 1970 களில் சிங்கள மக்களின் போராட்டத்தை நசுக்க சிறீமா தலைமையிலான அரசுக்கு உதவியது. 1987-ல் தமிழ் மக்களின் போராட்டத்தை நசுக்க இலங்கை - இந்திய ஒப்பந்தம் மூலம் அமைதிப்படையாக வந்து நடத்திய ஆக்கிரமிப்பு யுத்தத்தை அகதிகளான நாங்களே மறக்கவில்லை.

தமிழ் இன, மொழி உணர்வாளர்களான நீங்கள் மறந்தது ஏன்? ஏன்?

இந்திய ராணுவம் வந்தபோது, அகதிகள் பிரச்சனை தீரும் என நம்பப்பட்டது. இந்தியாவில் இருந்த அகதிகள்கூட இலங்கைக்கு வந்தனர். ஆப்கானிஸ்தானில் நுழைந்த ரசிய ஆக்கிரமிப்பு இராணுவம் ஆப்கானிஸ்தானை விட்டு வெளியேறிய போது வெளிநாடுகளில் இருந்த ஆப்கானின் அகதிகளில் 1 இலட்சத்து 30 ஆயிரம் அகதிகள் ஆப்கானுள் சென்றனர். ஆனால் இலங்கையில் இருந்து இந்திய இராணுவம் வெளியேறிய போது இலங்கையிலிருந்து அகதிகள் வெளியேறினார்களே தவிர, வெளிநாட்டிலிருந்து இலங்கைக்குள் அகதிகள் வரவில்லை.



**Uncertain future:** Thousands of Afghan refugees wait at the border with Pakistan at Torkham after the bombing of Jalalabad by the Taliban late last month

இன்று ஆப்கானை விட்டு வெளியேறும் அகதிகள்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



1987-இல் சிறீலங்கா அரசு புலிகளை கடுமையாக பலவீனப்படுத்தி கழுத்தை நெரிக்கும் நிலைக்கு சென்ற போது, "இந்தியா தலையீடக் கோரி" தமிழீழ இயக்கங்கள், தமிழ்நாட்டின் ஆதரவாளர்களும் பலமாக வேண்டினர். இந்திய அரசு விமானங்களில் உணவுப் பொட்டலங்களை முதலில் போட்டது. பின்னர் அதே விமானங்களில் இருந்து குண்டுகளைப் போடும் என அகதிகள் உட்பட பலர் எதிர்பார்க்கவில்லை. ஆனால் அப்படித்தான் நடந்தது. உணவு போட்டபோது அமைதிப்படையாகவும், குண்டுபோட்ட போது ஆக்கிரமிப்புப் படையாகவும் பார்த்த தவறு இனியும் நடக்கக்கூடாது. சோமாலியாவில் அய்.நா. சபை அமைதிப் படைகளும் இப்படித்தான் செய்தது என்பதை தமிழீழ அகதிகளும், உலக அகதிகளும் புரிந்து கொண்டு சிந்திக்கிறார்கள்.

தமிழீழ தேச விடுதலையை உண்மையாக, அறிவுபூர்வமாக நேசிக்கின்றவர்கள், ஆதரிக்கின்றவர்கள் செய்ய வேண்டியது "இந்திய அரசை, அய்.நா. சபையை இலங்கையில் தலையீடக் கோருவதை உணர்வுபூர்வமாக நிறுத்த வேண்டும். இந்திய அரசும் - அய்.நா.சபையும் தமிழீழத்தில் தலையீடக்கூடாது எனக் கோர வேண்டும். யுத்தத்தை நிறுத்தி - அரசியல் தீர்வுகாண, தமிழீழ மக்களின் அரசியல் கோரிக்கையான "திம்புக் கோரிக்கைகளை" அங்கீகரிக்க கோர வேண்டும். இதற்காக சிறீலங்கா அரசை நிர்ப்பந்திக்க கோர வேண்டும். தமிழீழ அகதிகளுக்கு அரசியல் தஞ்சம் கொடுக்க கோர வேண்டும். இந்திய அரசு தமிழீழ அகதிகளுக்கு "அகதி அந்தஸ்து" கொடுக்க கோர வேண்டும். இவற்றை செய்ய மறுக்கும் இந்திய அரசின், அய்.நா.சபையின் தலையீட்டுக் கொள்கையை எதிர்க்க வேண்டும்.

"இந்திய இராணுவத் தலையீட்டை கோரும்" தமிழீழ போராளி இயக்கங்களை, அகதிகளுக்கான தன்னார்வக் குழு அமைப்புக்களை அம்பலப்படுத்த வேண்டும். 87-ல் இந்திய இராணுவத்துக்கும் - புலிகளுக்கும் நடந்த யுத்தத்தில் அழிக்கப்பட்டதும், அகதிகளாக்கப்பட்டதும் தமிழீழ மக்கள் மட்டுமல்ல. இந்திய அரசின் செய்கையால் தமிழ்நாட்டு இராணுவத்தினரும், பிற மாநில இராணுவத்தினரும் பலியிடப்பட்டார்கள். அவர்களின் பிள்ளைகளும், விதவைப் பெண்களும், தாய் தந்தையரும், உற்றார் உறவினர்களும் அனுபவித்துவரும் துன்ப துயரங்களை அகதிகளான நாம் அறிவோம். மீண்டும் இந்தியத் தலையீடு கோரி, தமிழக இராணுவத்தை மீண்டும் பலியிட முனையும் "தமிழீழத்தவர்களை" தமிழ்நாட்டில் கண்டிப்பது மட்டுமல்ல அவர்களின் செயற்பாட்டை தடுத்து நிறுத்துவதும் தமிழக மக்கள் அமைப்புக்களின் உண்மையான சரியான கடமையாகும். இதைப் பற்றிப் பேசாத, தீர்மானம் நிறைவேற்றாத தமிழீழ ஆதரவு முழுநிறைவடையாது.

இப்போது நடக்கும் தமிழீழ ஆதரவுப் போராட்டங்களில் "யுத்தத்தை நிறுத்தி அரசியல் தீர்வு காண வேண்டும்" "இந்திய இலங்கை ஒப்பந்தத்தை அமுல்படுத்த வேண்டும்" "மூன்றாவது நாட்டின் முன்னிலையில் பேச்சுவார்த்தை நடத்த வேண்டும்" என முன்வைக்கப்படுகிறது.

கடந்த 15 வருட யுத்தத்தில் பேச்சுவார்த்தை மூலம் தீர்வு வரும், அகதி வாழ்வுக்கு முற்றுப்புள்ளி இடப்படும், தாய் மண்ணில் மீண்டும் வாழ்வோம் என



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



நம்பி ஏமாந்ததுதான் அகதிகளின் வரலாறு. மூன்றுமுறை நடந்த பேச்சுவார்த்தைகளிலும் நாம் பகடைக் காய்களாக, பார்வையாளர்களாக வைக்கப்பட்டிருக்கிறோம். 1985-இல் இந்திய அரசு முன்னிலையில் நடந்த திம்பு பேச்சுவார்த்தையில் போராளிகள் தமிழீழ தனிநாட்டுக் கோரிக்கையை கைவிட்டு அரசியல் தீர்வுக்கு தயாராக சென்றார்கள். குறைந்த பட்சமான நான்கு கோரிக்கைகளை முன் வைத்தார்கள்.

1. இலங்கைத் தமிழர்களை ஒரு தேசிய இனம் என அங்கீகரித்தல்.
2. இலங்கையில் தமிழருக்கு இன்னதெனக் கூறக்கூடிய தாயகம் உண்டு என்பதை அங்கீகரித்தல்.
3. தமிழ்த் தேசிய இனத்தின் சுய நிர்ணய உரிமையை அங்கீகரித்தல்.
4. இலங்கையைத் தம் நாடாக கொண்ட எல்லாத் தமிழர்களது பிரஜாவுரிமையையும், அடிப்படை உரிமைகளையும் அங்கீகரித்தல்.

ஆனால் J.R. அரசு அதைக்கூட ஏற்றுக் கொள்ள மறுத்து பேச்சு வார்த்தையை குழப்பியது. இந்திய அரசு J.R. அரசை நிர்பந்தப்படுத்தி கீழிறங்கச் செய்து திம்புக் கோரிக்கைகளை அங்கீகரிக்க வைப்பதற்கு பதில் போராளிகளை கீழிறங்க நிர்ப்பந்தித்தது. போராளிகள் "திம்புக் கோரிக்கைகளை கைவிடுவது தமிழ் மக்களுக்கு செய்யும் துரோகம்" என கூறி கீழிறங்க மறுத்தார்கள். (இந்திய அரசு தமிழீழத்தை வெல்ல உதவும் என நம்புபவர்கள் எவ்வளவு பெரிய முட்டாள்கள்) J.R. அரசுக்கு ஆதரவாக இந்திய அரசு போராளிகளை நிர்ப்பந்தித்தது.

1987-இல் இந்திய அரசும் - இலங்கை அரசும் (ராஜீவ் - J.R.) தமிழீழ பிரச்சனையை தீர்ப்பதாகக் கூறி 'திம்புக் கோரிக்கைகளை' அங்கீகரியாது ஒரு ஒப்பந்தம் நடந்தது. பிரச்சினை தமிழீழ மக்களுக்கும் - சிறீலங்கா அரசுக்கும் இடையில் இருக்கையில் போராளிகளை புறக்கணித்துவிட்டு இந்தியாவும் இலங்கையும் ஒப்பந்தம் செய்து கொண்டன.

இவ் ஒப்பந்தம் தமிழீழ மக்கள் - போராளிகள் மேல் திணிக்கப்பட்டது. அரசியல் தீர்வை அமுல்படுத்த வந்த இந்திய இராணுவம், ஆக்கிரமிப்பு யுத்தத்தை நடத்தியது. அகதிகளின் பிரச்சினையைக் கூட இவ் ஒப்பந்தம் தீர்க்கவில்லை. ஆயிரக்கணக்கில் அகதிகளை உருவாக்கியதுதான் மிச்சம்.

95-இல் சந்திரிகா அரசு இலங்கை வரலாற்றில் முதன்முதலாக ஒரு "அரசியல் திட்டத்தை" (இதுவும் திம்புக் கோரிக்கைகளை அங்கீகரிக்கவில்லை) முன் வைத்துவிட்டு ஒரு இன அழிப்பு யுத்தத்தை நடத்தி வருகிறது. இந்த அரசியல் தீர்வும், யுத்தமும் கூட இன்று இலட்சக் கணக்கில் அகதிகளை உருவாக்கிக் கொண்டிருப்பது தெளிவாகத் தெரிகிறது.

இதுவரை காலம் நடந்த பேச்சு வார்த்தைகள், அரசியல் தீர்வுகள், ஒப்பந்தங்கள் கூட நமக்கு எந்த மாற்றத்தையும் தர வில்லை. ஏன் எனில் சிறீலங்கா அரசும், இந்தியாவும் வைக்கும் அரசியல் தீர்வுகள், ஒப்பந்தங்கள் அவர்களது படைகளின் ஆக்கிரமிப்பு யுத்த நடவடிக்கைகள் மூலம்தான் அமுல்படுத்தப்படுகிறது. தமிழீழ தேசமும், மக்களும், அகதிகளும் இந்த அளவுக்கு இன்று சின்னாபின்னப்பட்டிருப்பதற்கு இந்த ஆக்கிரமிப்பு யுத்தங்கள் மட்டும்தான் காரணமல்ல. அதற்கு பின்னணியில் இருக்கும் அரசியல் தீர்வுத் திட்டம்தான் அடிப்படைக் காரணம் என்பதை அகதிகளும் புரிந்து கொள்ளத் தொடங்கியுள்ளனர்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



சந்திரிகா அரசு மிகமிகச் சாணக்கியமாக "சமாதானம், அமைதி" என்ற பெயரில் ஒரு மோசடியான அரசியல் தீர்வுத் திட்டத்தை ஒரு கையில் காட்டியபடி, மறு கையால் இன அழிப்பு யுத்தத்தை நடத்தி வருகிறது. யாழும், கிளிநொச்சியும் புலியிடம் இருந்து சிங்கம் கைப்பற்றிவிட்ட வெற்றிக் களிப்பில் சந்திரிகாவின் அரசியல் தீர்வுத் திட்டம் சமாதான அமைதித் திட்டமாக உலகளவில் பிரச்சாரம் செய்யப்படுகிறது.

யுத்தம் நிறுத்தப்படுவதில், அரசியல் தீர்வு மூலம் அமைதி, சமாதானம் கிடைப்பதில் ஆகக்கூடுதலாக சந்தோசப்பட்டு வரவேற்பவர்கள் தமிழீழ அகதிகளாகவே இருப்பார்கள். ஆனால் இந்த யுத்தம் தோன்ற, அகதிகள் உருவாக காரணமான அரசியல் பிரச்சினைகளை தீர்க்காத பேச்சு வார்த்தை, ஒப்பந்தங்களால் அகதிகளுக்கும் விடிவு கிட்டாது. யுத்தமும் நிற்காது என்பதை நமது அகதி வரலாறும், நடக்கும் யுத்தமும் காட்டுகிறது.

கடந்த காலங்கள் போல் தமிழீழ அகதிகள் இனியும் எவரிடமும் ஏமாறத் தயாரில்லை. இந்த யுத்தமும் அகதிகளும் தோன்ற காரணமான அரசியல் பிரச்சினை தீர்க்கப்பட வேண்டும் என்பதையும், தமிழீழ மக்களும், போராளிகளும் அகதிகளும் தமது அரசியல் கோரிக்கையாக முன்வைத்து வரும் திம்புக் கோரிக்கைகள் அங்கீகரிக்கப்பட்டால்தான் அரசியல் தீர்வு வரும், யுத்தம் நிறுத்தப்படும் என்பதையும் அரசியல் அரிச்சுவடி தெரிந்த ஒவ்வொருவரும் புரிந்துகொள்ள முடியும், புரிந்து கொள்ள வேண்டும்.

எனவே மொட்டையாக "அரசியல் தீர்வு காணப்பட வேண்டும்; யுத்தம் நிறுத்தப்பட வேண்டும்" என்ற கோரிக்கைகள், ஆதரவுப் போராட்டங்கள் பயனில்லை. "திம்புக் கோரிக்கையின் அடிப்படையில் அரசியல் தீர்வு காணப்படவேண்டும். யுத்த நிறுத்தம் ஏற்பட வேண்டும். இந்திய அரசை, அய்.நா. சபையை தலையீடக் கோரக் கூடாது, திம்புக் கோரிக்கைகளை அங்கீகரிக்கக் கோர வேண்டும், சந்திரிகா அரசை திம்புக் கோரிக்கைகளை அங்கீகரிக்குமாறு நிர்ப்பந்திக்க கோர வேண்டும்.

உண்மையான தமிழீழ ஆதரவாளர், அகதி ஆதரவாளர்களின் கடமையாக இது இருக்க முடியும். இதைப் பற்றிப் பேசாத, தீர்மானம் நிறைவேற்றாத தமிழீழ ஆதரவு முழு நிறைவடையாது.

5 கோடி தமிழர்கள் வாழும் இந்தியாவில், தமிழ்நாட்டில் தமிழீழ அகதிகளுக்கு இதுவரை "அகதி அந்தஸ்து" கொடுக்கப்படவில்லை. தமிழீழ ஆதரவுப் போராட்டங்களின் ஆகக் குறைந்தபட்சமான கடமையென்பது. தமிழீழ அகதிகளுக்கு அய்.நா. சபையின் கொள்கைப்படியே "அகதி அந்தஸ்து" கொடுக்கக் கோரி இந்திய மத்திய - மாநில அரசுகளை கோர வேண்டும், தீர்மானங்கள் நிறைவேற்ற வேண்டும், இதற்காக தொடர்ச்சியான போராட்டங்கள் நடத்த வேண்டும். தமிழீழ அகதிகளுக்கு "அகதி அந்தஸ்து" கொடுக்கக் கோரி 1 இலட்சம் தமிழக மக்கள் கொதித்தெழுந்தால் இந்திய அரசு என்ன செய்யும்? தமிழீழ ஆதரவாளர்களே சிந்தியுங்கள்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## சிறீலங்கா அரசே!

☆ யுத்தத்தை, அகதிகள் மேலான விமானக் குண்டு வீச்சை, செல் தாக்குதலை நிறுத்து.

☆ வவுனியாவில் தடுத்து வைத்துள்ள அகதிகள் விரும்பிய பகுதிக்கு போக அனுமதி.

☆ அகதி முகாம்களில் படைகளின் அத்துமீறலை தடுக்க நடவடிக்கை எடு.

☆ பசியால், நோயால் வாடும் அகதிகளுக்கு நிவாரண உதவிகளை உடனே வழங்கு.

☆ அகதிகளுக்கு உதவும் அமைப்புக்கள் முகாமுள் வர அனுமதி கொடு.

☆ "திம்புக் கோரிக்கையை" அங்கீகரித்து அரசியல் தீர்வை முன்வை.

## இந்திய மத்திய – மாநில அரசுகளே!

☆ தமிழ்நாட்டிலுள்ள அகதிகளுக்கு "அகதி அந்தஸ்து" கொடுங்கள்.

☆ தமிழ் நாட்டுக்குள் தஞ்சம் புகும் அகதிகளுக்கு ஆதரவுக்கரம் நீட்டுங்கள்.

☆ அகதிகளுக்கான உதவித் தொகையை, நிவாரணங்களை அதிகரியுங்கள்.

☆ இந்தியத் தலையீட்டை ஆதரிக்கும் போராளி – அகதி அமைப்புக்களை அனுமதிப்பது போல் இந்திய ஆதரவை கோரும் அகதி அமைப்புக்களையும் அனுமதியுங்கள்.

☆ அரசியல் தீர்வு ஏற்பட, அகதிகள் நாடு திரும்ப "திம்புக் கோரிக்கையை" அங்கீகரியுங்கள்.

## அய்ரோப்பிய, கனடா அரசுகளே!

☆ அரசியல் தீர்வு ஏற்படும் வரை அகதிகளை திருப்பி அனுப்பாதீர்கள்.

☆ அகதிகளுக்கான உதவித் தொகையை குறைக்காதீர், வேலை கொடுங்கள்.

☆ அகதிகள் மீது நாஜீக்கள் நிறவெறியர் நடத்தும் தாக்குதல்களை தடுத்து நிறுத்துங்கள்.

☆ சமாதானம், அமைதி ஏற்பட "திம்புக் கோரிக்கையை" அங்கீகரியுங்கள்.

☆ அரசியல் தீர்வுக்கு சிறீலங்கா அரசை நிர்பந்தியுங்கள்.

தொடர்பு விலாசம்

**MR. NAZIR ATAF**
**POST BOX - 415**
**9001 TROMSO**
**NORWAY**

வெளியிடுபவர்கள்: சுமைகள் – நோர்வே
**SUMAIHAL - NORWAY**

தமிழ் அகதிகள் இலக்கிய வட்டம் – பிரான்ஸ்
**TAMIL REFUGEE LITERATURE CENTRE - FRANCE**

ஈழ அகதிகள் உரிமைக் கழகம் – கனடா
**EELAM REFUGEES RIGHTS ORGANISATION - CANADA**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்